## 1. பாஞ்சராத்ர ஆகமத்தின் மங்களாசாஸனம் வரலாறு

குற்றமற்ற ஞானம் ஆனந்தம் ஆகியவற்றையே தேகமாக உடையவரும், ஏகாயன வேதத்தை லக்ஷ்மிக்கு உபதேசித்த ப்ரபுவாயுமுள்ள ஸ்ரீ வாஸுதேவருக்கு நமஸ்காரம்.

லக்ஷ்மியின் பதியும், சங்கம், சக்ரம், கதை ஆகியவற்றைத் தரித்தவரும், வித்யா உருக்கொண்டவருமான ஸ்ரீ ஹயக்ரீவ தேவரை, சப்தங்களின் அர்த்த ஞானத்தை அடைவதின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன்.

நீரைக் குடித்துக் கர்ஜிக்கும் மேகம் போன்றவரும், மோக்ஷத்தை அடைவிப்பவரும், எங்கும் வ்யாப்தமானவரும், பாஞ்சராத்ர ஆகம ஆசார்யருமான வைகுண்டாதிபதியான ஸ்ரீ விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்.

## 2. ஐந்து சிஷ்யர்களின் பெயர்கள்

1) அனந்தன், 2) கருடன், 3) ஸேனேசன், 4) ப்ரம்மா, 5) ருத்ரன் என்ற ஐந்து தேவர்களுக்கு உபதேசிக்கப்பட்டதால் பாஞ்சராத்ரம் எனப்படும். ராத்ரி என்றால் அஜ்ஞான இருள். பஞ்ச என்றால் அதை போக்கடிப்பது. அஜ்ஞானத்தை போக்கி, ஞானத்தை தருவதால் பாஞ்சராத்ரம் எனப்படும்.

## 3. ஆகமத்தின் பெயர்கள்

இதில் 108 ஸம்ஹிதைகள் குறிப்பிடத்தக்கவை. அவற்றில், பாத்மம், ஸ்ரீப்ரசனம், ஸாத்வதம், பௌஷ்கரம், ஜயாக்யம், லக்ஷ்மீ தந்த்ரம், பாரமேஸ்வரம் முதலியன முக்கியமானவை. இதில் ஆகமம், மந்த்ரம், தந்த்ரம், தந்த்ராந்தரம் என்ற நான்கு ஸித்தாந்தப் பிரிவுகளும், ஞானம், யோகம், க்ரியை, சாயை என்ற நான்கு பாதங்களும் உண்டு. ஞானம் என்பது பகவத் ஞானம். யோகம் என்பது பகவத் பக்தி; கிரியை என்பது ஆலய நிர்மாணம், பிம்ப ப்ரதிஷ்டை முதலியன. சாயை அர்ச்சா மூர்த்திகளின் ஆராதனம், நித்யோத்ஸவம் முதலியன.

## 4. செய்ய வேண்டிய முறை

கண்ணாடி, பூர்ணகும்பம், யானை, பசுவின் பின்பாகம்,

குதிரையின் முகம், ஸர்வாங்க ஸுந்தரியான பெண் ஆகியவற்றை பெருமாளுக்குக காட்ட வேண்டும்.

## 5. கதவு திறக்கும் மந்திரம்

ஓம் யம் வாயவே நமः என்ற வாயுவின் மந்த்ரத்தால் கதவைத் திறந்து, மூன்று முறை கைகளால் தாளமிட்டு, தேவ வ்ரத ஸாமத்தினால் அல்லது ப்ரணவத்தினால் வலது காலை முதலில் வைத்து ஸன்னதியில் நுழைய வேண்டும்.

## 6. தீபம் ஏற்றும் மந்த்ரம்

ஓம் ரம் ஜக்ஜ்யோதி ரூபாய நமः என்று விளக்குகளை ஏற்ற வேண்டும்.

## 7. அர்ச்சகர் லக்ஷணம்

யக்ஞோபவீதம், சிகை, திருமண், தாமரை மணி மாலை, பட்டு வஸ்த்ரம் இவைகளை பூஜா காலத்தில் தரித்துக் கொள்வது என்பது அர்ச்சகர்களின் லக்ஷணம்.

## 8. கர்பக்ரஹாதி சுத்தி விஷயம்

பஞ்ச பூத சுத்தி, ஸ்தான சுத்தி, த்ரவ்ய சுத்தி, பாத்ர சுத்தி, பிம்ப சுத்தி ஆகிய ஐந்து வித சுத்தியைச் செய்ய வேண்டும். இல்லையேல் அந்த கர்மா வீணாகும்.

## 9. நிர்மால்ய விஷயம்

பகவானின் திருமேனியிலிருந்து புஷ்ப மாலைகளைக் களைந்து, அவற்றால் விஷ்வக்ஸேனரை அலங்கரித்து, பகவானை நமஸ்கரித்து, கைகூப்பி வணங்க வேண்டும்.

## 10. புண்யாஹவாசன விதி

ஸ்ரீ விஷ்ணுவின் ஸன்னதியில் ஸ்ரீ வாஸுதேவ புண்யாஹ வாசனம் செய்ய வேண்டும். மனிதர்களுக்குரிய புண்யாஹ வாசனத்தை பகவத் ஸன்னதியில் செய்யக் கூடாது. தெரியாமல் செய்வித்தால் அந்த கர்மா வீணாகும். தர்பம், அரிசி, தேங்காய், தக்ஷிணை, தாம்பூலம், சந்தனம் ஆகியவை புண்யாஹவாசனப் பொருள்கள்.

## 11. பூதசுத்தி விஷயம்

அர்ச்சகர் தன்னுடைய தேஹம் பஞ்ச பூதங்களாலானது என நினைத்து அதை சோஷணம் முதலியவற்றால் மந்திர ந்யாஸங்களைச் செய்து, தேவ பூஜையைஆரம்பிக்க வேண்டும்.

## 12. அஷ்டாக்ஷர ஜபம் செய்யும் முறை

அர்ச்சகர் அஷ்டாக்ஷர ஜபத்தை 108 தடவை அல்லது 28 தடவை அல்லது 8 தடவை தாமரை மணி மாலையால் ஜபிக்க வேண்டும்.

## 13. ஸம்ஹார ஸ்ருஷ்டி முத்ரைகளின் விதி

ஆள்காட்டி விரலால் மோதிர விரலின் நுனியோடு சேர்த்து, அவ்வாறே கட்டை விரலின் நுனியை சுண்டு விரலோடு சேர்த்து மேல் நோக்கிய நடு விரலைக் கொண்டது ஸம்ஹார முத்ரை எனப்படும். இதன் விநியோகம் தத்வங்களின் ஸம்ஹாரம். தேவதைகளுக்கு விடையளித்து அனுப்புதல் முதலியன போன்ற எல்லா கார்யங்களிலும் இந்த முத்ரையை எப்போதும் உபயோகிக்க வேண்டும். சுண்டுவிரல், மோதிர விரல், நடுவிரல் ஆகிய மூன்றையும் கட்டை விரலுடன் மடக்கி மேல் நோக்கிய ஆள்காட்டி விரலையுடையது ச்ருஷ்டி முத்ரை எனப்படும். இதன் விநியோகம் தேவதைகளைக் கூப்பிடும்பொழுதும், தத்வங்களை ச்ருஷ்டிக்கும் போதும் இம்முத்திரை சொல்லப் பட்டுள்ளது.

## 14. மாநஸ யாகம்

தேவர்களுக்கெல்லாம் தேவனே! நழுவாதவனே! (அல்லது) பக்தர்களை நழுவ விடாதவனே! தங்களின் பொருட்டு நல்வரவு. என்னிடம் ஸாந்நித்யத்தை அடைவீராக. என் சக்திக்குத் தக்கபடி நான் த்யானிக்கும் மானஸ பூஜையைப் பெற வேண்டும் (பதினாறு உபசாரங்களையும் மனதினாலேயே ஸமர்ப்பிக்க).

## 15. பாத்ர ஸ்தாபனம்

பகவானின் முன்னிலையில் பீடத்தில் பூஜா பாத்ரங்களின் வேதிகையை வைக்க வேண்டும். ப்ரதிக்ரஹ பாத்ரத்தை அதன்

வாயிலில் பூமியில் வைக்க வேண்டும்.

### 16. 5 வட்டில், 3 வட்டில் ஸ்தாபனம்

மூன்று வட்டில்களை வைக்கும்போது, பாத்ய வட்டிலை நடுவிலும், அர்க்ய வட்டிலை தனக்கு வலது புறத்திலும், ஆசமன வட்டிலைத் தனக்கு இடது புறத்திலும் வைத்து குறிப்பிட்ட த்ரவ்யங்களை தர்ப்ப நுனி, அக்ஷதை, புஷ்பம் முதலியவைகளை அவற்றில் போட வேண்டும். தீர்த்தத்தை நிரப்ப வேண்டும். அர்க்ய பாத்ரத்தில் விஷ்ணு, பாத்ய பாத்ரத்தில் மதுஸூதனன், ஆசமன பாத்ரத்தில் த்ரிவிக்ரமன் ஆகிய மூவர்களை அர்ச்சிக்க வேண்டும்.

ஐந்து வட்டில்களை வைக்கும்போது சுத்த ஜல பாத்ரத்தை நடுவிலும், சந்தன ஜலமுள்ள அர்க்ய பாத்ரத்தை தென் கிழக்கிலும், பாத்ய பாத்ரத்தை தென் மேற்கிலும், ஆசமன பாத்ரத்தை வடமேற்கிலும், ஸ்நான பாத்ரத்தை வடகிழக்கிலும் வைத்து குறிப்பிட்ட திரவ்யங்களை அவற்றில் போட வேண்டும்.

அர்க்ய பாத்ரத்தில் லக்ஷ்மியையும், பாத்ர பாத்ரத்தில் பித்ருக்களையும், ஆசமன பாத்ரத்தில் ஸரஸ்வதியையும், ஸ்நான பாத்ரத்தில் வருணனையும், சுத்த ஜல பாத்ரத்தில் சாந்தியையும் ஆவாஹனம் செய்து பூஜிக்க வேண்டும்.

### 17. பீட கல்பனம்

நான்முகனே பூஜையின் ஆரம்பத்தில் யோக பீடத்தைக் கல்பனம் செய்தல், மந்த்ர ந்யாஸம் செய்தல் முதலியனதை எப்போதும் ஸ்திரமான மூலபேரத்திற்கே செய்ய வேண்டும்.

### 18. ஆவாஹனம்

மூல பேரத்திலிருந்து தான் கர்மார்ச்சை முதலிய பிம்பங் களின் ஸாந்நித்யத்தைச் சிந்திக்க வேண்டும். ப்ரம்ம ஸ்தானத்தில் கர்மாச்சையையும், தெற்கில் உத்ஸவ மூர்த்தியையும், வடக்கில் தீர்த்த பேரம், ஸ்நான பேரம் ஆகியவற்றையும், மற்ற உலோக பிம்பங்களை இஷ்டப்பட்ட விடங்களிலும் ஸ்தாபிக்க வேண்டும்.

## 19. ஷட்பேரங்களின் பெயர்கள்

கர்மார்ச்சை, உத்ஸவ அர்ச்சை, பலி அர்ச்சை, தீர்த்த அட்சை, ஸ்நான அர்ச்சை, சயன அர்ச்சை என ஆறு பேரங்கள் உண்டு. ஆறு பேரங்களும் இருந்தால் பூஜை உத்தமம். மூன்று பேரங்கள் இருந்தால் மத்யமம், ஒரு பேரம் இருந்தால் அதமம்.

## 20. பேரங்களின் கார்யங்கள்

1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.

## 21. ந்யாஸ விஷயம்

நிற்கும் கோலத்திலுள்ள பிம்பம், ஆஸனத்தில் வீற்றிருக்கும் பிம்பம், ஆகியவற்றின் ப்ரதிஷ்டா காலத்தில் அந்த பிம்பங்களுக்கு எந்த மந்த்ரத்தினால் ந்யாஸம் செய்யப்பட்டதோ, அந்த மந்த்ரத்தினாலேயே ந்யாஸம் செய்ய வேண்டும். தனக்கும் அந்த ந்யாஸத்தைச் செய்து கொள்ள வேண்டும். ச்ருஷ்டி ந்யாஸம், ஸ்திதி ந்யாஸம், ஸம்ஹார ந்யாஸம் என மூன்று வகைப்படும். நின்றிருக்கும்போது ஸ்திதி ந்யாஸம், உட்கார்ந்திருக்கையில் ச்ருஷ்டி ந்யாஸம், உத்யோகம், யோகம், போகம், ச்ருஷ்டி, ஸம்ஹாரம் என்ற ஐந்து விதமான சயன பேரங்களில் ஸம்ஹார சயன பேரத்திற்கு ஸம்ஹார ந்யாஸம். ச்ருஷ்டி சயன பேரத்திற்கு ச்ருஷ்டி ந்யாஸம். போகம், யோகம் ஆகிய இரு சயன பேரங்களுக்கும், விஸ்வரூபத்திற்கும் ஸ்திதி ந்யாஸம். வாஹனத்தில் ஏறியுள்ளதற்கு மூன்று ந்யாஸங்கள் என அறியவும். அல்லது அமர்ந்துள்ளது முதலியவற்றில் ஸ்திதி ந்யாஸம் ஒன்றே.

### 22. மந்த்ராஸநம் முதல் சயநாஸநம் வரை

முதலில் மந்த்ராஸனம், பிறகு ஸ்நானாஸனம், அலங்காராஸனம், போஸ்யாஸனம், யாத்ராஸனம், சயனாஸனம் ஆக தேவதார்ச்சனம் ஆறு விதமானது.

### 23. ஹோமம் செய்யும் விதி

ஹோம காலத்தில் நித்யாக்னி, வயதானது என்றும், உத்ஸவாக்னி யௌவனம் உள்ளது என்றும், தீக்ஷை, சாந்தி ப்ரதிஷ்ட்டை ஆகிய காலத்தில் பாலாக்னி என்றும் கூறப்படும். அந்தந்த கர்மாக்களுக்குரிய அக்னியை மேற்கண்டவாறு த்யானித்து ஹோமம் செய்ய வேண்டும்.

### 24. உத்தம, மத்யம, அதம பூஜைகளின் விஷயம்

தைத்யர்களின் சத்ருவான பகவானின் ஆரானை நித்யோத்ஸவத்துடன் முடிவது உத்தமோத்தமாகும். ஹோமத்துடன் முடிவது உத்தமமாகும். போஜனத்துடன் நிற்பது மத்யமமாகும். தூப, தீபங்களுடன் மாத்திரம் முடிவது அதமமாகும். அர்க்யம் முதலியதுடன் முடிவது அதமாதமமாகும்.

### 25. பலி விஷயம்

அர்ச்சகன் ஹோமம் முடிந்ததும், தினந்தோறும் பலி அர்ச்சயையோ, அன்னமூர்த்தியையோ முன்னிட்டுக் கொண்டு, அக்னி சாலையின் வாயிலில் உள்ள குமுதன் முதலியோருக்கும் பலியைத் தர வேண்டும்.

### 26. த்வார தேவதைகளின் பெயர்கள்

நான்கு (அல்லது) இரண்டு கைகளையுடைய த்வார பாலகர்களை உருவத்தில் மூலபேரம் என்றும், கையில் தர்ஜனத்தை உடையவர்களாயும், கர்ப்ப க்ருஹத்தின் வாயிலில் வலது பக்கத்தில் சண்டனையும், இடது பக்கத்தில் பிரசண்டனையும் சிற்பிகளால் கல்பிக்க வேண்டும்.

அர்த்த மண்டபத்தில் சங்க சக்ர உத்தமாங்கர்கள் இருவரையும், அந்தர் மண்டலத்தில் ஜயன், விஜயன் என்ற இருவர்களையும் ஸ்தாபிக்க வேண்டும்.

## 27. ஸ்நபன விஷயம்

ஒன்று, ஐந்து, ஒன்பது, பன்னிரண்டு, பதினாறு, பதினேழு, இருபத்தொன்று, இருபத்தைந்து, முப்பது, நாற்பத்தொன்பது, எண்பத்தொன்று கலசங்கள்.

பிரதிஷ்டை, உத்ஸவம், ப்ராயஸ்சித்தம் முதல் கர்மங்கள், ஸங்கராந்தி முதலிய காலங்கள், ஆகியவற்றில் ஐஸ்வர்யத்தை அனுசரித்து, ஸ்ரீ பகவானுக்கு கும்பம், பிம்பம், மண்டலம், அக்னி என்ற சதுஸ்தான பூஜையைச் செய்து, அபிஷேகம் செய்ய வேண்டும்.

## 28. உத்தம, மத்யம. அதம ஸ்நபன விஷயம்

மேலே கூறியது முக்கிய அபிஷேகமாகும். ஹோமம் இல்லாதது மத்யமம், அவ்வாறே மண்டலம் இல்லாதது அதமமாகும். சமர்த்தன் அறிந்து செய்ய வேண்டும்.

## 29. பஞ்ச பர்வ விதி

விஷ்ணு ஆவிர்பாவ நக்ஷத்ரம் (1), அமாவாசை (2), சிரவணம் (3), ஏகாதசி (4-5), மாதப்பிறப்பு (6). ச்ரவணம் இல்லாத ஆலயங்களில் பஞ்சபர்வம் என்று பெயர். 6 பர்வங்களும் சேர்ந்தது ஷடத்வா என்று பெயர். ப்ரதி மாதமும் வெள்ளிக் கிழமைகளில் தாயாருக்கு உத்ஸவத்தை செய்ய வேண்டும்.

## 30. கடதீபம் செய்யும் முறை

கடத்தின் அல்லது கும்பத்தின் நுனியில் சந்திரன், கழுத்தில் விஷ்ணு, வயிற்றில் ப்ரம்மா, ஆஸனத்தில் ருத்திரன், முகத்தில் அக்னி ஆகிய தேவர்களை ஆவாஹித்து கடதீபத்தைக் காட்ட வேண்டும்.

## 31. ஸேவிக்கும் முறை

இரு கைகளுடனும், இரு கால்களுடனும், தலையுடனும், புத்தியுடனும், மனதுடனும், தான் ஜீவனாகியவன் என்கிற உணர்வுடனும் கதறிக்கொண்டு பூமியில் தன்னை தண்டம் போல் வீழ்த்தி, நான்கு தடவை செய்த நமஸ்காரத்தை ஸ்ரீ வாஸுதேவனிடம் ஸமர்ப்பிக்க வேண்டும்.

## 32. ஸ்ரீ சடாரியை ஸாதிக்கும் முறை

மோக்ஷத்தைக் காப்பதின் பொருட்டு, நான்கு வர்ணத்தார்களின் தலைகளின் மீது சடாரியை ஸாதிக்க வேண்டும். ஸ்பர்ச தோஷம் உண்டு என்று சந்தேஹித்தால் ரௌரவாதி நரகத்தை அடைவான் (1) தலையிலும், (2) ஹ்ருதயத்திலும், (3) வலது புஜம், (4) இடது புஜம் ஆகிய இடங்களில் ஸாதித்து, மீண்டும் தலையில் ஸாதிக்க வேண்டும்.

## 33. ப்ரதக்ஷிணம் செய்யும் முறை

விஷ்ணுவின் ஆலயத்தில் தினந்தோறும் காலையிலும், மாலையிலும் இரண்டு ப்ரதக்ஷிணங்களைச் செய்ய வேண்டும். அதனால் அஸ்வமேதம் செய்த பலனை அடைவார்கள். ப்ரதக்ஷிணமானது அடிமேல் அடி வைப்பது, கைகள் அசையாமல் இருப்பது, வாக்கினால் துதிப்பது, மனதினால் தியானிப்பது ஆகிய நான்கு அங்கங்களைக் கொண்டது. மறுபடியும் ப்ரதக்ஷிணம் செய்தால் புனர்ஜன்மம் கிடையாது.

## 34. அடுக்கு தீபம்

அடுக்கு தீபங்களின் ஜ்வாலைகளில் நக்ஷத்ரங்களும், நடுவிலுள்ள தீபங்களில் சந்திரன் ஆகியோரும் உளர். அவற்றை ஏற்றித் திரையை விலக்கி, ஆசார்யன் பகவானின் பாதம் முதல் சிரஸ் வரையிலும் மும்முறை குண மந்திரத்தினால், அதாவது ஸத்வ குணாய நம:, ரஜோ குணாய நம:, தமோ குணாய நம: என்று காட்ட வேண்டும்.

## 35. தூப பாத்ரத்தின் தேவதை

தூப பாத்ரத்தின் அதி தேவதை அக்னி பகவான் என அறிந்து, அவனைப் பூஜித்து, தூபம் காட்ட வேண்டும்.

## 36. அஷ்டோத்தரம் செய்வதால் உண்டாகும் பலன்

பகவந் நாமங்களின் 108-ஐச் சொல்லி, பகவானின் திருவடிகளில் அர்ச்சனை செய்யும் ஆசார்யன் நிச்சயமாக ஸ்வர்க்கத்தை அடைவான்.

## 37. ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்வதால் உண்டாகும் பலன்கள்

1000 நாமங்களால் அர்ச்சனை செய்பவனும், செய்விப்பவனும், பூவுலகில் எல்லா இஷ்டங்களையும், பூர்ண ஆயுளையும், ஐஸ்வர்யத்தையும், புத்ர, பௌத்ரன்களையும் அடைந்து, அனுபவித்து, பிறகு விஷ்ணுவின் உத்தம லோகத்தை அடைந்து, நித்ய ஸூரிபோல் ஆனந்தமாக இருப்பான்.

## 38. முத்ரை காண்பிப்பதின் பலன்

சிறந்த அர்ச்சகன் பகவானின் மகிழ்ச்சிக்காக முத்ரைகளைக் காட்ட வேண்டும். இந்த முத்ரைகள் அஸுரர்கள், ராக்ஷஸர்கள் ஆகியோரின் சந்தோஷத்தை விரட்டுவதால் (முதம் த்ராவயதி) முத்திரை எனப்படுகிறது.

## 39. ஷோடச உபசாரங்கள்

நம் சக்திக்கேற்றபடி, 16 உபசாரங்கள் முக்கியமானவை. 1. ஆவாஹனம், 2. ஆஸனம், 3. அர்க்யம், 4. பாத்யம். 5. ஆசமனம், 6. ஸ்நானம். 7. வஸ்த்ரம், 8. யஜ்ஞோபவீதம். 9. சந்தனக்காப்பு, 10. ஆபரணம், 11. புஷ்ப மாலைகள், 12. தூபம், 13. தீபம், 14. மதுபர்க்கம், 15. போஜனம், 16. விஸர்ஜனம் அதாவது மூலபேரத்தில் சேர்ப்பது.

## 40. அக்னி பேதங்கள், குண்ட இலக்ஷணங்கள்

வேதியின் கிழக்கில் ஆஹவனீய அக்னிக்குச் சதுரமான குண்டம், மேற்கில் கார்ஹபத்ய அக்னிக்கு வட்டமான குண்டம், வடக்கில் ஸப்யம் என்ற அக்னிக்கும், தெற்கில் தக்ஷணாக்னிக்கும் வில்வ வடிவம் போன்ற குண்டம் முக்கோண குண்டம், வடகிழக்கில், அல்லது தென்கிழக்கில் ஆவஸத்யம் என்ற அக்னிக்குச் சதுரமான குண்டம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். இந்த ஐந்து அக்னிகளுடைய உத்ஸவம் உத்தமமானது.

ஸ்ரீ
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமச் சடாரிம்பஜே:
பாஞ்சராத்ராகமாசார்யம் வந்தே வைகுண்ட பூபதிம்:

# ஸ்ரீ பாஞ்சராத்ர ப்ரதிஷ்டா விதி

(தமிழ் மொழி பெயர்ப்பு)

## 1. ஆசாரிய லக்ஷணம்

எம்பெருமானின் சன்னிதி பிரதிஷ்டைக்காக பிரம்ம குலத்தில் உதித்தவனாயும், வித்வானாயும், ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்திர பராயணானாயும், ஒருவிதக் குற்றமில்லாதவனாயும், சகல கல்யாண குணங்களோடு கூடியவனாயும், கூடுதல் குறை அங்கங்கள் இல்லாத கல்யாணமான சரீரத்தோடு கூடின வனாயும், நல்ல கைராசி உள்ளவனாயும், கேள்வி கல்விகளில் சிறந்தவனாயும், வ்ருத்தவானாயும், ஒழுக்கம் உள்ளவனாயும், வேதாத்யயனம் செய்தவனாயும், தர்ம வத்ஸலனாயும், பஞ்ச காலத்தை அறிந்து அதை அனுஷ்டிப்பவனாயும், பொறுமை உள்ளவனாயும், ஜிதேந்திரியனாயும், பிரபுவாயும், செல்வந்த-னாயும், ஷட் கர்ம கிருதனாயும், மந்திர சித்தாந்தம் முதலிய சித்தாந்தங்களின் பேதப் பிரகாரம் சோடசந்நியாசம் செய்வதில் கெட்டிக்காரனாயும், கூனல் இல்லாதவனாயும், காருண்யம் நிறைந்தவனாயும், பிரம்மத்தை அறிந்தவனாயும், சத்தியவாதி யாயும், தைரியசாலியாயும், பிரியமாக முன்பேசுகிறவனாயும், சாத்விகனாயும், நியாயம் உள்ளவனாயும், வாத பிரதிவாதங்களில் சமர்த்தனாயும், பொறமை இல்லாதவனாயும், தொந்தங்களை வென்றவனாயும், எல்லாப் பிராணிகளிடத்திலும் சமநோக்குள்ள வனாயும், ஆனந்த துக்கங்களில் சமநிலை உள்வனாயும், மிதமாகப் பேசுகிறவனாயும், எப்பொழுதும் துவாத சாக்ஷர தியானபரனாயும், மானிட ஆராதனத்தில் சிறந்ததும், பாஞ்ச ராத்திர சாஸ்திரங்களில் சிறந்ததும், சுதந்திரம் உள்ளவனாயும், பெரியவர்களை சேவிப்பவனாயும், அழகுள்ளவனாயும், ஆஸ்திகனாயும், பிரம்மண்ய நிந்தை செய்யாதவனாயும், நல்ல புகழ் உள்ளனாயும், ஒருவித அபவாதம் இல்லாதவனாயும், சகல

சாஸ்திர அர்த்தம் தெரிந்தவனாயும், ஒருவித வியாதி இல்லாதவனாயும், சக்கராப்ஜ மண்டலத்தில் தீக்ஷை பெற்றவனாயும், கிரஹஸ்தன், பிரம்மசாரி, வானப்பிரஸ்தன் இதில் எந்த ஆஸ்ரமத்தில் இருந்தாலும் இப்பேர்ப்பட்ட குணம் உள்ளவனை எஜமானன் முதலில் ஆசாரியனாக வரிக்கவேணும்.

எஜமானனும் முன்சொன்ன குணங்களோடு கூடியவனாக இருக்கவேணும்.

ருத்துக்களும் ஆசாரியனுக்குச் சொல்லப்பட்ட குணங்கள் அமைந்தவர்களாய் இருக்கவேணும்.

## 2. ப்ரும்மசரிய க்ரஹஸ்த ஆசாரியர்கள் செய்யக்கூடிய கிரியைகள்

இவர்கள் **வடு** என்றும், **யுவன்** என்றும், **சமன்** என்றும், **விருத்தன்** என்றும், நான்குவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். பதினாறு வயதுக்குட்பட்டவர் வடு என்றும், இருபத்தைந்து வயது பூர்ணமானவர் யுவன் என்றும், அறுபது வயதுவரை உள்ளவர் சமன் என்றும், அதற்கு மேற்பட்டவர் சிரேஷ்டன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வடு முதல் விருத்தன் முடிய நால்வர்களும், நித்திய ஆராதனத்திற்கு யோக்கியமானவர்களே. நைமித்திக காரியங்களுக்கும், அங்குரார்ப்பணத்தை முன்னிட்டதான காரியங்களுக்கும் சமன் அல்லது சிரேஷ்டன் இவர்களே செய்ய யோக்கியதை உள்ளவர்கள். வடுவும், யுவனும் நித்ய ஆராதனத்திற்குத்தான் யோக்யதை உள்ளவர்கள். அங்குரார்ப்பண காரியங்களையும், நைமித்திக காரியங்களையும் இவ்விருவர்களும் செய்யக்கூடாது.

**வடுர் யுவா சமோ வ்ருத்தோ யோக்யோ நித்யார் சனாவிதௌ**
**நைமித்திகே சாங்குரேது சமச்ரேஷ்டதமேனவா ।। பாத்மம்**

இப்பேர்ப்பட்ட ஆசாரியனிடம் எஜமான் எம்பெருமானை ஸந்நிதியில் ஸ்தாபிப்பதற்காக முதலில் தேங்காய், பசு, பூமி, ஸ்வர்ணம் இவைகளை வைத்துக் கொடுத்து, ப்ரார்த்தித்து, ப்ரதிஷ்டை செய்து தரவேணுமாய் ப்ரார்த்திக்க வேணும். ஆசாரியனுக்கு அனுகூலமாக இவ்விதமே குணங்களுள்ள

பதினாறு, எட்டு, நான்கு, ருத்க்களையும் ஆசாரிய முகமாக நியமிக்க வேணும். இவ்விதம் சாஸ்த்ரோக்தமான ஆசாரிய ருத்துக்களைக் கொண்டு பகவத் ஸ்தாபனம் செய்யும் எஜமான் சகலவிதமான ஐஸ்வரியங்களையும் அடைகிறான். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவ்விதம் இல்லாமல் சாஸ்த்திர விருத்தமான ஸ்தாபனம் நடக்குமேயானால் இவர்கள் இஷ்டப் பட்ட பலனை அடைவதில்லை. எஜமான சீக்கிரத்திலேயே மரணம் அடைகிறான். அந்த ஸந்நிதியும் வெகுகாலம் இருப்ப தில்லை. அரசன், தேசம் இவர்களும் நாசம் அடைவார்கள். பகவான் அந்த ஸந்நிதியில் சாந்நித்யம் கொள்வதில்லை.

## 3. எஜமான லக்ஷணம்

முன் சொன்ன லக்ஷணங்களோடு இருந்தாலும், பிராமண னாக இருந்தாலும், சந்நியாசிக்கு யோக்கியதை கிடையாது. மற்றைய மூன்று வர்ணத்தவர்களுக்கும் எஜமான பதவிக்கு யோக்யதை உண்டு. குண்டன், கோளகன் மற்றும் பிரம்மண்யத்திற்கு மற்ற யோனிகளில் பிறந்தவர்கள் இவர்கள் எஜமானப் பதவிக்கு யோக்கியதை இல்லை. கீழ்ச்சொன்ன எஜமான் பகவத் கைங்கரியத்தில் சிரத்தை உள்ளவனாயும், ஆஸ்திகனாயும், பக்திமானாயும் தனம், தான்யம், இவைகள் நிறைந்தவனாயும், பகவத் கைங்கர்யங்களில் மகோத்ஸாஹம் உள்ளவனாயும், பரிசுத்தனாயும், திறமை உள்ளவனாயும், செய் நன்றி உள்ளவனாயும், லோபம் இல்லாதவனாயும் இவ்வித குணமுள்ள, ப்ரும்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும், அனுலோமஜனும் (மேல்குலத்தவனுக்கு கீழ் குலத்தவளிடம் பிறந்தவன்) கூட எஜமானனாக நியதி உண்டு.

## 4. சந்நிதிகள் இரண்டு விதம் (பேதம்)

***சித்த சந்நி**தி* என்றும், **மனுஷ்ய சந்நிதி** என்றும் மலைகளின் அடிவாரம், சிகரம், நதிக்கரை, சமுத்திரநதி சங்கமம், சமுத்திரக் கரை, நதியின் மத்தியமேடு, அருவிப்பக்கம், காடு இவைகளில் உள்ள சந்நிதி விஸ்வகர்மாவினால் நிர்மாணிக்கப்பெற்று தேவாதி களால் எம்பெருமானை ஸ்தாபனம் செய்யப்பெற்று சித்தம் என்ற பெயரை உடையது. நகரம கிராமம் இவைகளில் உள்ள சந்நிதிகள்

மனிதர்களால் நிர்மாணிக்கப்பெற்று ஸ்தாபனம் செய்யப்பட்டு மானுஷ்யம் என்ற பெயருடையதாகும்.

## 5. பிரதிஷ்டா பஞ்சகம்

பிரதிஷ்டை ஐந்து விதம். அவை **ஸ்தாபனம், ஆஸ்தா-பனம், சம்ஸ்தாபனம், பிரஸ்தாபனம், பிரதிஷ்டை** என்பன. (1) நின்ற வடிவாக எம்பெருமானை பிரதிஷ்டை செய்வது ஸ்தாபனம் (2) வீற்றிருந்த வடிவாக எம்பெருமானைப் பிரதிஷ்டை செய்வது ஆஸ்தாபனம் (3) சயனத் திருமேனியாக பிரதிஷ்டை செய்வது சம்ஸ்தாபனம் (4) வாகனாரூடராக பிரதிஷ்டை செய்வது பிரஸ்தாபனம் (5) கர்மார்ச்சயை அர்ச்சனா பீடத்தில் பெஹுபேர பிரதிஷ்டையில் சேர்ப்பது பிரதிஷ்டை என ஐந்து விதம்.

### மற்றும் மூன்றுவிதம் ஸ்ரீப்ரச்னம்

கீழ்ச்சொன்ன பிரதிஷ்டா பஞ்சகத்தில் ஆவர்த்தம், அனுவர்த்தம், புனராவர்த்தம் என்று மூன்று விதம் (1) முதன் முதலில் பால பிம்பத்திலிருந்து நூதன மூலபேரரிடம் சக்தி ஆவாஹனம் செய்வது ஆவர்த்தம் எனப்படும். (2) சண்டாளர்கள் தொட்டு அல்லது வெகுகாலம் திருவாராதனம் நின்று இவை களுக்காகச் செய்யும் சம்ப்ரோக்ஷணம் அனாவர்த்தம் எனப் படும். (3) ஜீர்ணமான மூலவரிடமிருந்து பாலபிம்பத்தில் ஆவாஹித்து ஜீர்ணம், சந்தானம் ஆனபின் பிறகு பால பிம்பத்-திலிருந்து மூலவரிடம் ஆவாஹனம் செய்யும் சம்ப்ரோக்ஷணம் புனராவர்த்தம் எனப்படும். இதை ஸ்ரீப்ரச்ன சம்ஹிதை கூறுகிறது.

## 6. பூ லக்ஷணம்

ஆலய நிர்மாணத்திற்காக கீழ்ச்சொன்ன குண லக்ஷணங் களோடு கூடின எஜமானனும், ஆசாரியனும் வாஸ்த்து சாஸ்த்திரத்தில் சமர்த்தனான ஆலய நிர்மான சிற்பியோடு கூட பூமியை சோதனை செய்ய வேணும். பூமி நான்கு விதம். பூமியானது **சுபத்மா, பத்ரகா, பூர்ணா, தூம்ரா** என நான்கு விதப்படும்.

**அவைகளின் லக்ஷணம் :**

**1) சுபத்மா :** செண்பக மரம், அஹில் மரம், கற்பூர மரம், மஞ்சாடி மரம், மருத மரம், பாக்கு மரம், தென்னை மரம், குசம், நாணல் இவைகள் நிறைந்ததும், தாமரைப் புஷ்பம் உள்ள குளங்களோடு கூடினதாயும், மேற்கிலிருந்து கிழக்காகவும், தெற்கிலிருந்து வடக்காகவும் சிறுகச் சிறுகத் தாழ்ந்த பூமிநிலையும், நான்கு பக்கங்களிலும் ஜலம் சுற்றியும் எந்த பூமி இருக்கிறதோ அதற்கு சுபத்மா என்று பெயர்.

**2) பத்ரகா :** நதி, சமுத்திரம் இவைகள் பக்கத்திலும், பூமியினுள் சிறிது தூரத்திலேயே தண்ணீர் கிடைக்கக் கூடியதாயும், பால் மரங்கள், கூட்டமாகவும், பழங்கள் உள்ள மரங்கள் அடர்ந்தும், உத்யானம், உபவனம், கொடிகள், செடிகள் இவைகளோடு கூடியும் யக்ஞ விருக்ஷங்கள் நிறைந்ததும், குசம், நாணல், வயல் இவைகளோடும், கீழே நீருள்ள பூமியாயும் இருக்கும் பூமியானது பத்ரபூமி எனப்படும்.

**3) பூர்ணா :** கொள், வேப்ப மரம், மொச்சை, வரகு-சாமை இவைகளோடு கூடினதும், மலைப்பக்கமுள்ளதும், மலையின் உச்சியிலுள்ளதும், ஜலமில்லாததுமான பூமி பூர்ணபூமி எனப் படும்.

**4) தூம்ரா :** யவம், மூங்கில் கூட்டம், சதுரக்கள்ளி, துர்க்கந்தம், கடுசர்க்கரை, இவைகளுள்ளதும், காக்கை, கழுகு, பருந்து, நரி, நாள் இவைகளுள்ளதும் உளமண்ணோடு கூடியதுமான பூமி தூம்ர பூமி எனப்படும்.

## 7. இவைகளில் சந்நிதி நிர்மாணிப்பதால் ஏற்படும் பலன்

சுபத்மா சாந்தியையும், பத்ரகா சுகத்தையும், பூர்ணா செழிப்பையும், தூம்ரா குறைவையும் கொடுக்கும்.

## 8. பூமிப் பரீக்ஷை

ஒரு தடியளவு அகலம், நீளம், முழங்கால் அளவு ஆழம் தோண்டி, மறுபடி தோண்டிய மண்ணையே அந்தக் குழியை நிரப்ப வேணும். அப்படி நிரப்பிய மண் அதிகமாக இருந்தால் அது உத்தமம். சரியாக இருக்குமானால் அது மத்யமம். குழியை

நிரப்ப அதே மண் காணாமல் இருக்குமானால் அது அதமம். அதம பூமியை விட்டு விடல் வேண்டும்.

### 9. பீஜாவாப பரீக்ஷை

நெல், பயறு, யவம் முதலிய தானியங்களை பூமியில் விதைத்து, மூன்று இரவுக்குள் அவை முளைத்து விட்டால் அது உத்தம பூமி. ஐந்து இரவுகளில் முளைத்தால் மத்யமம். ஏழு இரவுகளில் முளைத்தாலும், முளையாமலே இருந்தாலும் அது அதம பூமி. அதமத்தைத் தள்ளிவிட வேண்டும். அதம பூமியை யும், குசம், புரசு, மான்கள், இவைகள் உள்ள பூமியானால், ஸ்தாபனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது விசேஷ விதி.

### 10. ரசவர்ணப் பரீக்ஷை

பூமி தித்திப்பாக உள்ளது உத்தமம். கடுப்பாக உள்ளது மத்யமம். மற்றப்படி சுவையுள்ளது அதமம். வெள்ளை நிறம் உத்தமம். மஞ்சள், பொன்நிறம் மத்யமம், கருப்பு நிறம் அதமம். கீழ் சொன்னபடி பூமியைப் பரீக்ஷை செய்து, யோக்யமான பூமியில் வாஸ்த்து சாஸ்திரத்தில் சமர்த்தனான சிற்பியோடு கூட ஆசாரியன் பாஞ்சராத் ரோக்தமான பிரவேச பலி முதலில் செய்ய வேணும்.

### 11. பிரவேச பலி

ஆசாரியன் எசமானனோடும், நிருத்தவாத்ய, தூர்யா கோஷங்களோடும், வேத கோஷங்களோடும், பூர்ண கும்பங்களோடும் அநேக தீபம், துவஜம், சாமரம், குடை இவைகளோடும் வேதப் பிராமணர்களோடும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களோடும், பூமி பரீக்ஷை செய்து, ஆலயத்திற்கு நிச்சயமான இடத்தை பிரதக்ஷிணமாக ஸ்வஸ்த்தி வசனம் சேவித்துக் கொண்டு சென்று கிழக்கு முதல் எட்டுத் திசைகளிலும் பூதம், பைசாசம், ரக்ஷஸ், க்ரஹங்கள் அஷ்டதிக் கஜங்கள், இவைகளுக்கு பலி செய்து பிரம்ம ஸ்தானத்தில் பாய சான்னத்தால் பலி சாதித்து, கீழ் சொன்ன தேவதைகளைக் குறித்து, எம்பெருமானுக்கு சந்நிதி கட்ட வேண்டி இருப்பதால் எல்லோரும் இவ்விடத்தை விட்டு போகவேண்டுமென்ற

பொருள் கொண்ட ஸ்லோகத்தைச் சேவிக்க வேண்டும் பின் அஸ்த்ர மந்திரத்தால் அக்ஷதைகளை இறைத்து அப்பூமியில் ஆலய ஆகிருதியான கோடு செய்து, நூலைக் கட்டி, அதில் பாலை மரத்தாலான முளை அரைய வேணும். பின்பு வாஸ்த்து பலி சாதிக்க வேணும்.

## 12. வாஸ்த்து புருஷ கல்பனம்

கீழ் நோக்கின முகமும், கிழக்கே தலையும், கோணத் திக்கு களில் நீட்டின கை, கால்களை உடையவனாயும், த்யானித்து வாஸ்த்துவை அர்ச்சிக்க வேண்டும். வாஸ்த்துவிற்குத் தென் பக்கம் ஸ்தண்டிலத்தில் அக்னி உத்பாதனம் பண்ணி பஞ்சோப-நிஷத் மந்திரத்தால் நெய்யால் ஆயிரம் அல்லது நூறு ஆகுதிகள் வாஸ்த்து சாந்திக்காகவும், யக்ஷரக்ஷ பைசாசங்களுக் காகவும் நாயுருவி; வன்னி; கருங்காலி இந்த சமித்துக்களால் ஆகிதியும், மூல மந்த்ரங்களினால் தனித்தனியாக நூற்றி எட்டு ஆகுதிகளும், வாஸ்த்து மந்திரத்தால் நூறு ஆகுதி அவிசாலும், ஹோமம் செய்து பின்பு பூர்ணாகுதி செய்து, இந்திராதி திக்பாலர்களுக்கு பலி சாதிக்க வேணும்.

## 13. பூசம்ஸ்காரம்

பிறகு நல்லதொரு நாளில் கீழே சொல்லப்பட்ட பிரகாரம் கிரியாம்சம் செய்யப்பட்ட பூமியை அடைந்து முன்போல் அங்குள்ள தேவதைகளுக்கு பலி சாதித்து, அப்பூமியை ஆசாரியன் ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்து, அஸ்திர மந்திரத்தால் பூமி எங்கிலும் அக்ஷதைகளையும், வெண் கடுகுகளையும் இறைத்து, முன்போல் வாஸ்த்து ஹோமம் செய்து பலி சாதிக்க வேணும்.

## 14. பூகர்ஷண விருஷபலக்ஷணம்

பிறகு பாகவ தோத்தமனான ஆசாரியன் பூமியை கலப்பை யினால் உழவேணும். கர்ஷணம் செய்யக்கூடிய கிரியைக்கு எஜமானன் பிராமணனானால் வெள்ளை நிற எருதுகளும், க்ஷத்திரியனுக்குச் சிகப்பு நிற காளைகளும், வைசியனுக்கு பொன் நிறக் காளைகளும், சூத்திரனுக்கு கருப்பு நிறக் காளைகளும்

சொல்லப்பட்டிருக்கிறது. சாஸ்த்ரோக்தமாகச் சொல்லப்பட்ட நிறம் கிடைக்காவிட்டால், பழுப்பு நிறம் அல்து வெள்ளைக் காளைகளை உபயோகிக்கலாம். கீழ் சொல்லப்பட்ட காளை களை ஸ்நானம் செய்வித்து, கால் குழம்புகள், தலைக்கொம்புகள் இவைகளைத் தங்கத்தால் அலங்கரிக்க வேணும்.

## 15. நுகத்தடி கலப்பை லக்ஷணம்

பிராமணனுக்கு நுகத்தடி; கலப்பை புரசாலும், க்ஷத்திரிய னுக்கு ஆல மரத்தாலும், வைசிய சூத்திரர்களுக்கு அரச மரத்தாலும், நுகத்தடி கலப்பை செய்ய வேணும் அல்லது எல்லோருக்குமே ஆல் அல்லது அரசு இவைகளில் இருக்கலாம். இவைகளைப் பிணைப்பதற்கு கயிறு குசத்தாலாவது, நாணல் புல்லாலாவது இருக்க வேணும்.

## 16. ஆசாரியனுடைய அலங்காரம்

ஆசாரியன் (தீர்த்தமாடி) ஸ்நானம் செய்து, புது வஸ்த்திரம், உத்திரீயம், உஷ்ணீசம் தரித்து, பரிசுத்தனாய் சந்தன புஷ்பாதி களால் அலங்கரித்துக் கொண்டு கை கால்களை சுத்தி செய்து, ஆசமனம், பிராணாயாமம், செய்துக் கொண்டு, பிராம்ணோத்த மர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் அனுக்ஞை பெற்றுக் கொண்டு பூகர்ஷணத்திற்கு ஆரம்பிக்க வேணும்.

## 17. பூகர்ஷணம்

புண்யாஹாவாசனம் செய்து, ஸ்ரீ வைஷ்ணவர்களோடு காளையின் கழுத்தில் மூலமந்திரத்தால் நுகத்தடியைச் சேர்த்து. அதே மந்திரத்தால் கலப்பையையும், நுகத்தடியில் சேர்த்து, நல்ல முகூர்த்தத்தில், நல்ல லக்கனத்தில் பேரி, படகம், சங்கம் முதலிய தூரிய கோஷங்கள் முழங்க, ஸ்ரீ வைஷ்ணவோத்தமர்கள் சாகுன சூக்தம் கோஷிக்க, ஆசாரியன் கிழக்கு முகமாக நின்றுக் கொண்டு, புரச மரத்தலான சாட்டைக் குச்சியால் ஹும்கார, பட்கார, மந்திரத்தால் காளைகளை விரட்ட வேணும். முதலில் கிழக்கு முகமாக மேற்கே இருந்து உழவேணும். முதலில் மூலமந்திரத்தால் கிழக்கு நோக்கி உழவேணும். இரண்டாவது ந்ருசூக்தத்தாலும், மூன்றாவது விஷ்ணு சூக்தத்தாலும்,

நான்காவது விஷ்ணு காயத்ரியாலும், ஐந்தாவது நாராயணா நுவாஹத்தாலும், ஆறாவது பஞ்சோபநிஷத்தாலும், ஏழாவது பூசூக்தத்தாலும் முன்போலவே மேற்கே இருந்து கிழக்கு முகமாகவும், இதுபோலவே தெற்கே இருந்து வடக்கு முகமாகவும் கீழ்ச்சொன்ன ஏழு விதமான மந்திரத்தாலேயும் பிரதக்ஷிணக் கிரமமாக உழவேணும். பின் அப்பூமியில் நிமித்த பரீக்ஷை செய்யவேணும்.

## 18. நிமித்த பரீக்ஷை

நிமித்த பரீக்ஷை என்பது பூமியை உழும்பொழுது உண்டாகும் சுபஅசுபங்களைப் பொருத்தது. பூகர்ஷணம் செய்யும் பொழுது ஆசாரியன் மகத்தான சந்தோஷம் உள்ளவனாக இருக்கவேணும். அவ்விதமில்லாமல் வியாகுலம் இருக்குமேயானால் சந்நிதிக்கும் எஜமானனுக்கும் தாழ்வு ஏற்படும். உழும்பொழுது காளைகள் படுத்துக் கொண்டாலும், பூட்டாங்கயிறு அறுந்து போனாலும், தலைகீழாகச் சுற்றி உழுதாலும், நடுப்பாதியில் கயிறு அறுந்தாலும் எஜமானனுக்கு நிச்சயம் மரணம் சம்பவிக்கும். மூன்றாம் பாகத்தில் கயிறு அறுந்து போகுமானால் தேசத்திற்கு தரித்திரம் உண்டாகும். இவ்விதம் கெட்டவைகள் நேர்ந்தால் உடனேயே பஞ்சோப நிஷது மந்திரத்தால் நூறு ஆகுதிகள் நெய்யால் ஹோமம் செய்து, பிராம்மணர்களுக்கு போஜனம் செய்து வைத்தால், கீழ் சொல்லப்பட்டவைகள் நிச்சயம் பலிக்காது.

## 19. பூமியில் விதைகள் விதைத்தல்

சாஸ்த்ரோக்தமாக உழப்பட்ட பூமியில் ரொம்பவும் முயற்சியோடு பாத்திகள் செய்து, நீரோடைகள் உண்டு பண்ணி, பாத்திகளில் நெல் விதைகள், பயறு விதைகள், தினை விதைகள் இவைகளை விதைத்து, பிரதி தினமும் தண்ணீர் பாய்ச்சி, அது பலனளிக்கும் வரை காவல் செய்து நல்ல பக்குவம் அடைந்தபின் அங்கே பசுக்களை மேயவிட வேண்டும். பயிர் (தான்யம்), ரொம்பவும் செழிப்பாக வளர்ந்திருந்தால் அதில் கட்டப்போகும் சன்னிதி நீண்ட காலம் நிலைத்திருக்கும். பயிறு (தான்யம்) கொஞ்சமாக உண்டாகியிருந்தால் சன்னிதி கொஞ்சநாள்

இருக்கும். பலனே இல்லாதிருந்தால் அந்த சன்னிதி க்ஷீணித்து விடும். இந்த அசுபக்ஙளை போக்குவதற்காக, அங்கே ஆயிரம் அல்லது நூறு பிராம்மணர்களுக்கு ததியாராதனம் (போஜனம்) செய்து வைத்து தனம், தான்யம், பசுக்கள் இவைகளை தானம் செய்தால் கீழ்ச்சொன்ன அசுபங்கள் நிவர்த்தியாகிறது.

## 20. பூமியைச் சோதித்தல்

பிறகு அப்பூமியை பஞ்சகவ்யத்தால், பஞ்சோப நிஷது மந்திரத்தால் ப்ரோக்ஷித்து கட்டப்பாரை அல்லது மண்வெட்டி யால் கீழே ஜலம் காணும்வரை, பூமியைத் தோண்ட வேணும். பிரதமாவரணம் எந்த நியதியில் கட்ட வேண்டுமோ அதுவரை அகல நீளம் தோண்டவேணும். தோண்டப்பட்ட பூமியில் காணும் குற்றம், குறைகளைப் பொறுத்து சன்னிதியின் பெருமை விளங்கும். இவ்விதம் தோண்டும்பொழுது சாம்பல், கொள்ளிக்கட்டை, உமி இவைகள் கிடைத்தாலும் அல்லது கெட்ட சத்துப் பொருள்கள் கிடைத்தாலும், புழுப்பூச்சிகள் கண்டாலும் இவைகளின் சாந்திக்காக ஆசாரியன் சாந்தி ஹோமம் செய்ய வேணும். பின் பிராம்மணர்களுக்கு யதா சக்தி சொர்ணதானம் செய்ய வேணும்.

ரத்தினங்கள் முதலிய நல்ல பொருள்கள் கண்ட அந்த சன்னிதி எக்காலத்திலும் சகல ஐஸ்வர்யங்களும் நிறைந்து செழிப்புற்றிருக்கும்.

## 21. காதஹோமம் ''கும்பஸ்தாபனம்''

இவ்விதம் பூமியைத் தோண்டினபின் குழிக்கு வெளியே சதுரமான தண்டிலத்தில் அக்னி உத்பாதனம் பண்ணி, மூல மந்திரத்தால் ஆஜ்யாகுதியும், புருஷ சூக்தத்தால் அவிசும், மறுபடியும் மூல மந்திரத்தால் குங்குலியம், எள்ளு, செந்தினை இவைகளையும் ஹோமம் செய்து தோண்டின பூமியில் நெல்லை நிரப்பு, சொர்ணம், வெள்ளி, செம்பு, மண் இவைகளாலான கும்பங்களை நூல் சுற்றி வஸ்திரங்கள் சாற்றி, புண்யாஹ வாசனத்தால் பூமியை ப்ரோக்ஷித்து கும்பஸ்தாபனம் செய்ய வேணும்.

பரப்பப்பட்ட நெல்லின் மேல் ப்ரும்ம பதத்திலும், அதைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் கும்பங்கள் வைத்து, மத்திக் கும்பத்தில் ஸ்வர்ணத் தகட்டில் ஆதார சக்தியை எதிப் போட வேணும். அதேபோல் கிழக்குக் கும்பத்தில் எல்லா பீஜங்களும், தென்கிழக்கில் சர்வலோக தாதுக்களும், தெற்கில் சர்வ தாதுக்களும், தென்மேற்கில் புண்ய நதி மண்களும், மேற்கில் தேனும், வடமேற்கில் நெய்யும், வடக்கில் ரத்னங்களும், வடகிழக்கில் மலையடி மண்ணும், நடுக்கும்பத்தில் வயல் மண்ணும், அருவித் தீர்த்த மண்ணும், புற்று மண்ணும், காய்ந்த இலைச்சருகுகளும் தானாக விழுந்த பழங்களும், பஞ்ச லோகங்களும், நவரத்தினங்களும் சேர்த்து கூர்ச்சம் வைத்து, சராவத்தால் மூடி பூஜக்க வேணும்.

முன்சொன்ன கும்பத்தின் மேல் இரண்டாவது கும்பம் வைத்து ஸ்வர்ணத் தகட்டில் கூர்மத்தையும், காலாக்னியையும் எழுதிப்போட வேணும். பிறகு அக்கும்பத்தின் மேல் மூன்றாவது கும்பஸ்தாபனம் செய்து, ஸ்வர்ணத்தாலான ஸ்ரீ அனந்தாழ்வானை எழுதிப்போட வேணும். பின் மூன்றாவது கும்பத்தின் மேல் நான்காவது கும்பம் வைத்து, ஸ்வர்ணத்தாலான தகட்டில் பூதேவியை எழுதிப்போட வேணும். கந்தோதகத்தால் எல்லாக் கும்பங்களையும் பூரித்து புண்யாகப்ரோக்ஷணம் செய்து, ஆவாஹித்தர்ச்சித்து, தோண்டின மண்ணால் கும்பங்களுக் கிடையில் தள்ளி, நிரப்பி நன்றாக த்ருடம் செய்து வெண் மணல்களினால் மேலும் நிரப்பி, கைகளால் த்ருடம் செய்து மறுபடியும் தீர்த்தத்தால் அம்மணலின் மேல் நிரப்ப வேணும்.

## 22. பாலாலய பிரதிஷ்டை

**ஆரப்யமாணே ப்ராஸாதே பஹவோ விக்னகாரிண: ।**
**பாலாலயே, க்ருதே தேவி, நச்யந்தி ஸ்வயமேவதே ।।**
**அதவா பால பிம்பம், தம் அநுவிச்ய வரானனே ।**
**ஸர்வதோஷாந் ஹநிஷ்யாமி, தஸ்மாத், தம்ஸ்தாபயேத்புரா ।। ஸ்ரீப்ரச்னே**

கீழ் சொன்னபடி செய்து முதலில் பாலக்ரஹத்தில் பால பிம்ப பிரதிஷ்டை செய்து அர்ச்சிக்க வேணும். இப்படி பாலாலயத்தில் எம்பெருமானை தியானித்து அர்ச்சிப்பதால்

பெரிய சன்னிதிக்கு தடையாக உள்ள யாவரும் பிம்பத்திலுள்ள எம்பெருமானால் நாசம் செய்யப்பட்டு, ஆலய கைங்கரியம் நிர்விக்னமாக முடியும்.

## 23. பாலாலயப் பிரதேசம்

இந்திர திசைக்கும் ஈசான்யத்திற்கும் நடுவிலோ, குபேர திசைக்கும் ஈசான திசைக்கும் நடுவிலோ இந்திர அக்னிக்கும், அக்னி யமனுக்கும், யம நைரிதிக்கும், நைரிதி வருணனுக்கும், வருண வாயுவுக்கும், வாயு சோமனுக்கும் நடுவில் அல்லது எஜமானனுக்கு ப்ரீதியான இடத்தில் பாலாலயம் செய்ய வேணும். இதன் அலக நீளம் 7,5 முழங்கள், கட்டப்போகும் பெரிய சந்நிதியின் வாசல் எந்தத் திசையோ, அதே வாசல் பாலக்ரஹத்திலும் செய்ய வேணும். பிரதிஷ்டை செய்யும் எம்பெருமான் சன்னிதி வேசம் (நிலை) பெரிய சன்னிதியில் எவ்விதமோ அவ்விதமே பால பிம்பத்தையும் உண்டாக்க வேணும்.

## 24. ''பாலாய எம்பெருமானின் திருவளர்த்தி''

இந்த பால எம்பெருமான் சிலை, உலோகம், மரம் இந்த த்ரவ்யங்களால் உண்டாக்கலாம். சங்கு, சக்கரம், பத்மம், கதை முலிய திவ்யாயுதங்களோடும், சதுாபுஜங்களோடும் இருக்க வேணும். இவருக்கு குறைவாக உள்ள அளவு 5 அங்குல உயரம். அதிக அளவு 23 அங்குலம். பெரிய சன்னிதியில் மத்ஸ்யாதி விபவ மூர்த்திகளில் ஒருவரை ஸ்தாபிப்பதானால் பால பிம்பமும், அவ்வுருவமாகவே இருக்கவேணும். பால பிம்பத்தை ஜலாதிவாச யேனோன் மீலனம் தத்வசம்ஹார, சிருஷ்டி சயனாதி வாசங்கள் முதலிய கிரியாம்சங்கள் செய்து பாலாலயத்தின் ப்ரும்ம பதத்திலோ, திவ்ய பாகத்திலோ மூன்று மேகலையோடு கூட வேதிகை ஒரு முழ உயரம் செய்து சூர்யோதய காலத்தில் சுப முகூர்த்தத்தில் மூல மந்திரத்தால் வேதிகையில் பிரதிஷ்டை செய்து, ப்ரோக்ஷண மந்திரந்யாசம் செய்து பிரார்த்தனை செய்ய வேணும்.

**ப்ரார்த்தனை :** பெரிய சந்நிதி கட்டி முடிந்து, அங்கே சேர்க்கும் வரை இந்த பாலாயத்திலிருந்து விக்னங்களைப்

போக்கி, சகல சுகங்களையும் அருளவேணும் என்று பால எம்பெருமானைப் ப்ரார்த்திக்க வேணும்.

**பரிவார கல்பனம் :** துவாரங்களில் சண்டப்பிரசண்டர்களையும், எதிரே கருடனையும், ஈசானியத்தில் க்ஷேத்திரபாலனையும், விஷ்வக்சேனரையும், மற்றுமுள்ளவர்களையும், ஸ்தண்டிலத்திலேயும், இந்திராதிகளை அவரவர்கள் ஸ்தானத்திலும் ஆவாஹித்து அர்ச்சிக்க வேணும்.

**ஸ்தண்டில அளவு :** கைமுழ அளவு அகல நீள உயரம், மூன்று மேகலையோடு கூட வட்டம் அல்லது சதுரமாகச் செய்ய வேணும்.

## 25. பாலாலயத்தில் கொடியேற்று விழா

இவ்விதம் பாலாலயத்தில் எம்பெருமானை ஸ்தாபனம் செய்து, சம்ப்ரோக்ஷண முடிவில் மகோத்ஸவம் செய்ய வேணும். கொடியேற்று முதலாக புஷ்பயாகம் வரையான உத்ஸவம் செய்யவேணும். அவ்வளவு பெரிய உத்ஸவம் செய்ய வசதி இல்லையானால், ஒருநாள் உத்ஸவமாவது பாலமந்திரத்தில் செய்யவேணும். பாலபிம்ப உலோகத்தாலானதானால் உத்ஸவம் பாலபிம்பத்தாலேயே செய்யவேணும். இவ்விதம் நித்ய நைமித்திக காம்யகம் முதலான கர்மாக்களை பாலாலயத்தில் செய்யவேணும். பாலபிம்பம் தாருவாகவோ சிலையாகவோ இருந்து, அங்கு உத்ஸவத்திற்கான பிம்பம் இல்லையானால் பால பிம்பத்தாலேயே உத்ஸவம் செய்யவேணும்.

**உத்ஸவார்த்தம் நசேத்பிம்பம் பாலேனைவோத்ஸவோ**
**பவேத் । பாத்மே ।।**

இவ்விதம் பாலாலயத்தில் சாஸ்த்ரோக்தமான உத்ஸவாதிகளை செய்து கொண்டே, மூலபேரருக்கு சாஸ்த்ரோக்தமாக ஆலய நிர்மாணம் செய்து, அது பூர்த்தியானவுடன் பால பிம்பத்திலிருந்து பெருமாளை மூலபேரரிடம் எழப் பண்ண வேண்டும். இவ்வித பாலாலய பிரதிஷ்டையால் ஆலய நிர்மாணக் கெடுதல்கள் தானாக நசித்துப் போகிறது அல்லது பகவான் நசிக்கச் செய்கிறார்.

## 26. ஆலய நிர்மாண விதி

பாத்மத்தினுடைய கருத்துக்களைக் கொண்டும், அதில் சொல்லப்படாதவைகளாயும், கோயில்களில் நேரில் அநுபவமாய் இருப்பவைகளை, மற்றவைகளிலிருந்தும், சம்ஹிதைகள் வெகுவிரிவாகச் சொல்லியிருப்பதை சாஸ்த்ர விரோதமில்லாது சுருக்கமாக ஆலய நிர்மாணம் எழுதப்படுகிறது.

### கர்ப்பக்ரஹம்

நகரங்கள், பட்டணங்கள், கிராமங்கள், இவைகளினுடைய நடுவிலோ, அல்லது மேல்பக்கமோ, அல்லது கீழ்ப்பக்கமோ சன்னிதி கட்டவேணும். சன்னிதி ஒற்றைப் படை அளவாகக் கட்டினால் போக ஐசுவதியங்களை உண்டு பண்ணும். இரட்டைப் படை அளவுள்ள சந்நிதி மோக்ஷ பலத்தையே கொடுக்கும். கர்ப்பக்ரஹ விமாந லக்ஷணம், பாத்ம ஸம்ஹிதை க்ரியாபாதம் 5,6,7,8,9 அத்யாயங்களில் சுமார் 50க்கும் மேலான விமானங்கள் சொல்லப்படுகிறது. அவை அங்கே காண்க.

### 1. விமானத்தில் உண்டு பண்ணக்கூடிய தேவதைகள்

| | | | |
|---|---|---|---|
| கிழக்கு | இந்திரன் | அல்லது | சுப்பிரமண்யன் |
| தெற்கு | உமாபதி | அல்லது | தக்ஷிணாமூர்த்தி |
| மேற்கு | நரசிம்மன் | அல்லது | ஸ்ரீதரன் |
| வடக்கு | பிரமன் | அல்லது | குபேரன் |

### 2 அல்லது இவர்களை மாற்றியும் அமைக்கலாம்

| | |
|---|---|
| கிழக்கு | ஆதிவராஹன் |
| தெற்கு | நரஹரி |
| மேற்கு | ஸ்ரீதரன் |
| வடக்கு | ஹயக்ரீவன் |

### 3 வது விதம்

| | |
|---|---|
| கிழக்கு | நரன் |
| தெற்கு | நாராயணன் |
| மேற்கு | ஹரி |
| வடக்கு | கிருஷ்ணன் |

## 4 வது விதம்

| | |
|---|---|
| கிழக்கு | புருஷன் |
| தெற்கு | சத்யன் |
| மேற்கு | அச்யுதன் |
| வடக்கு | அநந்தன் |

## 5 வது விதம்

| | |
|---|---|
| கிழக்கு | வாசுதேவன் |
| தெற்கு | சங்கர்ஷணன் |
| மேற்கு | ப்ரத்யும்னன் |
| வடக்கு | அநிருத்தன் |

## 6 வது விதம்

| | |
|---|---|
| கிழக்கு | கிரீதரன் |
| தெற்கு | வராஹன் |
| மேற்கு | நரசிம்மன் |
| வடக்கு | அனந்தன் |

இவர்களின் லக்ஷணங்களும், வர்ணங்களும் பாத்ம சம்ஹிதையில் காண்க.

இவர்கள் தவிர, மத்ஸ்யாதி தசாவதாரங்களும், அவதார காலத்திலுள்ள, லீலா சேஷ்டிதங்களும் அமைக்க வேணும்.

## விமாநம் தாங்கிகள்

விமாநத்தை தாங்கும் பாவனையாக, நான்கு மூலைகளிலும், இரண்டு பேராக அமைக்க வேணும்.

| | | |
|---|---|---|
| தென்கிழக்கு | வீரசேனன் | சுஷேணன் |
| தென்மேற்கு | சம்பவன் | பிரபவன் |
| வடமேற்கு | பூர்ணன் | புஷ்கராட்சன் |
| வடகிழக்கு | ஆநந்தன் | நந்தன் |

இவை சதுர வடிவமான விமாநத்திற்கு நீண்ட சதுர வடிவுள்ள விமாநமானால் பூர்ணன், புஷ்கரன், இவர்களை தென்வடக்குகளில் அதிகமாக அமைக்கவேணும். விமாந

தேவதைகளின் இருந்த, நின்ற, படுத்த நிலைகள் உள்ளே இருக்கும் பிரதான மூர்த்தியின் நிலையைப் பொருத்தது அது, பாத்மத்தில் காணலாம்.

மேலும் விமாநத்தின் ஒவ்வொரு தளத்திலும், வித்யாதர ஸ்திரீகள் நடனமும், கின்னர, கெந்தர்வர்களை அவர்களின் ஸ்திரீகளோடு கூட வாத்யம் இசை முழக்குபவர்களாகவும் அமைக்கவேணும்.

மேலும் உயரே நான்கு மூலைகளிலும் கருடன், அல்லது சிம்மம்; அல்லது இரண்டுமே அமைக்கவேணும்.

### "விமாந அதிஷ்டானத்தின் கீழ்தேவதைகள்"

தென்கிழக்கே யானைமுகன், தென்பக்கம் ஈசன் அல்லது தட்சிணாமூர்த்தி, மேல்பக்கம் ஆலிலையில் விசுவரூபியாக பகவான் ருஷிகள் புடைசூழ ஸேவிக்கும்வண்ணம், வடக்கே, பிரமன், ஈசானியில் பூமிபிராட்டி, அல்லது மஹிஷாசுரமர்த்தினி, இவ்விதம் அமைக்க வேணும். அல்லது விமாநத்தின் மேல் தளத்திலுள்ள தேவதைகளைப் போலும் செய்யலாம்.

இவ்விதம் அமைக்கப்பட்ட கர்ப்பக்ர விமாநத்தைச் சுற்றி **5** அல்லது **7** ஆவரணங்கள் அமைக்கவேணும்.

**பஞ்சமாவரணம் ப்ருத்வீ சதுர்த்தாவரணம் ஜலம்**
**த்ருதியாவரணம் வஹ்நி த்விதீயாவரணம் மருத்**
**ப்ரதமாவரணம் வ்யோம்நி கர்ப்பகேஹம் ததோதரம்**
**கர்ணிகா பீடமித்யுக்தம் ப்ரதிமா ஜீவமுச்யதே**
**விமாநம் தேகமித்யுக்தம் சிகரந்து சிகாக்ருதி:**

என்று **5** ஆவரணங்களையும் (ப்ராகாரம்) ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாயமாகிற பஞ்சபூதங்களாகவும், கர்பக்ரஹத்தை வயிராகவும், அதன் கீமுள் கர்ணிகையை பீடமாகவும் விமாநத்தை சரீரமாகவும் அதன் சிகரத்தை உள்ளிருக்கும் அர்ச்சாவிக்ரஹத்தை ஜீவனாகவும் சொல்லப்பட்டிருப்பதால் பஞ்சபூத மயமான **5** ஆவரணங்களையோ, பூ, புவா, சுவர், மஹ ஜநர், தப, ஸத்யமாகிற ஸப்தவ்யாக்ருதி ரூபமான ஆவரணங் களையோ அமைக்க வேணும்.

### அர்த்தமண்டபம்

கர்ப்பக்ரஹத்தின் முன்னதாக அதே அளவிலேயோ அல்லது அதைவிட அரைவாசி கூடுதலாகவோ, அல்லது அதற்கும் அதிகமாகவோ அர்த்த மண்டபம் அமைக்க வேணும்.

### நிருத்தமண்டபம்

அர்த்தமண்டபத்தின் முன்னதாக, கர்ப்பக்ரஹ அர்த்த மண்டபம் இவைகளின் அளவின் அரைவாசி கூடுதலாகவோ அதற்கும் அதிகமாகவோ நிருத்தமண்டபம் அமைக்க வேணும்.

### ஸோபனம்

இந்த நிருத்தமண்டபவத்தின் முன்பும், இருபக்கங்களிலும், ஸோபான பந்திகள் செய்யவேணும். இதன் படிக்கட்டுக்களின் இருபக்கங்களிலும், யானை துதிக்கை வடிவம் போன்று சுவர் அமைக்க வேணும்.

### ஆஸ்தான மண்டபம்

நிருத்த மண்டபத்திற்கு முன்னதாக, நிருத்த மண்டப அளவின் அரைவாசி கூடுதலாகவோ அல்லது அதற்கும் அதிகமாகவோ ஆஸ்தான மண்டபம் அமைக்க வேணும் அல்லது அம்மண்டபம் வேறு இடத்திலும் இதே அளவில் செய்து கொள்ளலாம்.

### பஞ்ச ப்ராகாரங்கள்

(1) அந்தர் மண்டலம் (2) அந்தர்ஹாரம் (3) மத்தியாந்தர் ஹாரம் (4) மர்யாதா (5) மஹாமர்யாதா என்று பெயர்கள்.

**1. அந்தர் மண்டலம் :** கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றி திருமதில் எழுப்பி, அத்திருமதிலுக்கும், கர்ப்பக்கிரஹச் சுவருக்கும் உள்ள சுற்று பிராகாரத்துக்கு அந்தர்மண்டலம் என்று பெயர். இதன் போக்குவரத்து வாசல் அர்த்த மண்டபத்தில் அமைய வேணும்.

**2. அந்தர்ஹாரம் :** அந்தர் மண்டலத்தையும், அர்த்த மண்டபச் சுவரையும் சுற்றித் திருமதிலெழுப்பி உள்ளேயிருக்கும் பிராகாரம் அந்தர்ஹாரம் என்று பெயர். இதற்கு போக வர வாசல்

நிருத்த மண்டபத்தில் அமைய வேணும்.

**3. மத்தியாந்தர்ஹாரம் :** அந்தர்ஹார பிராகாரத்தையும், நிருத்த மண்டபத்தையும் சுற்றி திருமதிலெழுப்பி அதின் உள்ளேயிருக்கும் பிராகாரம், மத்தியாந்தர்ஹாரம் எனப்படும். இதற்கு போக வர வாசல் ஆஸ்தான மண்டபத்தில் அமைய வேணும்.

**4. மர்யாதா :** மத்யாந்தர்ஹாரத்தையும், ஆஸ்தான மண்டபத்தையும் சுற்றிய திருமதிலுள் பிராகாரம் மர்யாதா எனப்படும். இதற்கு நான்கு திசைகளிலும் கோபுரத்தோடு வாசல் அமைய வேணும். கீழ்மேல் பக்கம் இரண்டிலுமாலுவது, கீழ்ப்பக்கம் மட்டிலுமாவது அவசியம் கோபுரம் செய்ய வேணும்.

**5. மஹாமர்யாதா :** மர்யாதா பிராகாரத்தைச் சுற்றிலுமுள்ள திருமதிலுள் பிராகாரம் மஹாமர்யாதா எனப்படும். இதற்கும் நான்கு திக்கிலும், அல்லது இரண்டு அல்லது முக்யமாக கீழ்ப்பக்கமாவது கோபுரம் அமைக்க வேணும்.

5 பிராகாரங்களுக்கும் மேல் மண்டபம் செய்ய வேணும். எல்லா வாசல்களிலும், கோபுரம் அமையலாம்.

ஒவ்வொரு வாசலுக்கும், இரண்டிரண்டு கதவுகள் செய்ய வேணும்.

## கோபுரம்

கோபுரம் விமான லக்ஷண ப்ரகாரம் செய்ய வேணும். சதுரம், நீண்ட சதுரம், வட்டம், நீண்டவட்டம், 8 (முக்கு கோணம்) 16 (முக்கு கோணம்) இவ்விதம், லக்ஷணங்கள் சம்ஹிதைகளில் அறிய வேணும்.

## துவாரபாலகர்கள்

ஒவ்வொரு வாசலிலும் தெற்கு, வடக்கு, இருபக்கங்களிலும், அவ்வாசலுக்கு, சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட இரு, துவார பாலகர்களை அமைக்கவேணும். மர்யாதா, மஹாமர்யாதா, இவைகளில் கோபுரங்கள், நான்கு திசைகளிலும் கட்டினால், ஒவ்வொரு கோபுரத்தின் வாசலிலும் இரு துவார பாலகர்கள்

வீதம் 8 கோபுரத்துக்கும் 16 துவார பாலகர்கள், அந்த ஸ்தானத்துக்கு யோக்யமானவர்களை அமைக்க வேணும்.

## சன்னிதிக் கருடன்

நிருத்த மண்டபத்திலோ, ஆஸ்தான மண்டபத்திலோ, 2,3,4 வது பிராகாரங்களிலோ நடுவில், பிராதான பேரருக்கு நேர்எதிர் முகமாக கெருடனை ஸ்தாபிக்க வேணும். இவர் இருப்புநிலை மூலபேரர் நிலையைப் பொருத்தது.

## சேனைமுதல்வர்

வடக்கு - வடகிழக்கு இத்திசையின் நடுவே சேனை முதல்வருக்கு சந்நிதி அமைக்கவேணும்.

## வீரலக்ஷ்மி

**யோகலக்ஷ்மீஸ்து ஸ்ரீவத்ஸம் போகலக்ஷ்மீத் விபார்ச்வயோ:**
**வீரலக்ஷ்மீஸ்துவைசேஷம் ப்ருதக் பவநகல்பநம்**

என்றபடி எம்பெருமானின் திருமார்பில் யோக லக்ஷ்மியையும், இருபக்கங்களில் போகலக்ஷ்மிகளையும், விசேஷமாகத் தனியாக தென்மேற்கே சன்னிதி கட்டி வீரலக்ஷ்மியையும் அமைக்க வேணும்.

தனியாக சன்னிதியில் ஆராதிக்கப்படுபவள் வீரலக்ஷ்மி. பெருமாள் திருமார்பிலுள்ளவர் யோகலக்ஷ்மி. பக்கங்களில் இருப்பவர்கள் போகலக்ஷ்மி எனப்படுவர்கள்.

## பலிபீடம்

ப்ராதான கோபுர வாசலின் மேல்பக்கம் பலிபீடம் அமைக்க வேணும். கோபுரத்திற்கு வெளியேயும் அமைக்கலாம்.

## கொடிமரம்

சந்திக்கருடனுக்கு பின்பக்கம் பலிபீடத்தின் முன் பக்கம் இரண்டுக்கும் நடுவே உள்ள இடத்தில் கோபுரத்தின் உயரமோ, விமானத்தின் உயரமோ ஆஸ்தான மண்டபத்தின் உயரமோ, கொடிமரம் ஸ்தாபிக்க வேணும். லக்ஷணங்கள் சம்ஹிதைகளில் காண்க.

## விபவமூர்த்திகள்

மத்ஸ்யம் முதல் கல்கி வரை, தசாவதார மூர்த்திகளை தேவிகளோடு அல்லது தனியாக, இஷ்டமான, ஆவரணம் (ப்ராகாரம்) ஏதேனுமொன்றில் ஸ்தாபிக்க வேணும். இவர்கள் தவிர, ஸ்ரீருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீக்ருஷ்ணன், சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன, அநுமார் இவர்களோடு கூட ஸ்ரீராமன், ஸ்ரீ பூமிஸமேத, வராஹன், உலகளந்த பெருமாள், லக்ஷ்மீ நரசிம்மன், லக்ஷ்மீ நாராயணன், ஸ்ரீதர இந்த மூர்த்திகளைத் தனியாக, யதேச்சையான ஆவரணங்களில் ஸ்தாபிக்க வேணும்.

## பக்த பிம்பங்கள்

ஆழ்வார் பதிமர், ஆசாரியர்கள் இவர்களுக்கு நேர் வடக்கு திசையில் தெற்கு முகமாக ஸன்னிதி ஏதேனும் மாவரணங்களில் உண்டு பண்ண வேணும்.

## திருப்பணாகம்பள்ளி

ஒன்று முதல் நான்கு வரையிலான ஆவரணங்கள் ஏதேனுமொன்றில் தென்கிழக்கில் அல்லது கிழக்கு, தென்கிழக்கு மத்தியில் மேற்கு வாசலை உடையதாக அமைக்க வேணும்.

## நித்திய ஹோம குண்டம்

திருப்பணாகம்பள்ளியின் மத்தியில் ஹோமகுண்டம் செய்ய வேணும். அல்லது தனியாக, தென்கிழக்கு, தெற்கு இவை நடுவே தனியாகவும் ஹோம குண்டம் செய்யலாம்.

## திருப்பணாகம்பள்ளி நாச்சியார்

திருமடப்பள்ளி உள்ளே மேற்குத்திக்கில் கிழக்கு முகமாக நாச்சியாரை ஸ்தாபிக்க வேணும்.

## திருப்பணாகம்பள்ளி பள்ளிக்கிணறு

உள்ளேயோ, வெளியிலோ, ஒரு கிணறு இருக்க வேணும். இரண்டிடங்களிலுமாயிருப்பது இச்சையைப் பொருத்தது.

### திருப்பணிகார மடப்பள்ளி

தென்மேற்கு, தெற்கு, இதன் நடுவே அமைக்க வேணும்.

### வியச்ன அறை (ஸ்டோர் ரூம்)

தென்மேற்கு, மேற்கு நடுவே இடம் அமைக்க வேணும்.

### எண்ணெய் முதலியன

வடகிழக்கிற்கும், வடக்கிற்கும் நடுவே அமைய வேணும்.

### தனாகாரம் (பண அறை)

வடக்கே குபேர திக்கில் அமைக்க வேணும்.

### திருமஞ்சனத் தீர்த்த அறை

தென்பக்கத்தில் அமைக்க வேணும்.

### வெற்றிலை முதலிய சுகந்தமுகவாச அறை

தென்மேற்கே அமைக்க வேணும்.

### திருப்பரிவட்ட அறை

மேல்திசையில் அமைக்க வேணும்.

### புஷ்பம் மாலை கட்டும் அறை

வடமேற்கே அமைக்க வேணும்.

### நெல் களஞ்சியம்

வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்கில் தானிய சங்கிரஹ அறை அமைக்க வேணும்.

### கோசாலை பசுப்பண்ணை

ஈசானிய திசையில் பசுக்கள் சாலை அமைய வேணும்.

### வாகன அறைகள்

மூன்றாவது பிராகாரத்தில் இந்திர திக்கில், குடை சாமர விருதுகள், பல்லக்கு வாகனங்கள் முதலியவைகளுக்கு இடம்

அமைக்க வேணும்.

### உத்ஸவ யாக சாலை

வடக்கு முதல் தெற்கு வரை திசைகளின் நடுவே அமைக்க வேணும்.

### தாள வாத்ய அறைகள்

வடமேற்கே வாத்ய, இசை அறைகள் அமைக்க வேணும்.

### கிணறுகள்

மேற்கு - வடக்கு - ஈசானியம் இவைகளில் வெளிப் பிராகாரத்தில் வெட்ட வேணும்.

### குளம்

8 திசைகளில் ஏதாவதொன்றில் பெரிய குளம் இருக்க வேணும்.

### மடம் நடை கிணறு

பிராகாரங்களுக்கு வெளியே நடைகிணறும், (இறங்கு கிணறு), சாஸ்த்ரம் கேட்பவர்களுக்கும், வேதாத்யயனம் செய்பவர்களுக்கும், சந்நியாசிகளுக்குமாக மடம் அமைக்க வேணும்.

### திருநந்தவனம்

கோவிலைச் சுற்றி புஷ்ப நந்தவனம் அமைக்க வேணும்.

### கருட சிம்மம்

எல்லாத் திருமதில்களின் 8 திசைகளிலும் கெருடனும், பக்கத்தில் இரு சிங்கங்களும் அல்லது கெருடனோ சிங்கங்களோ, தனியாகவாவது அமைக்க வேணும்.

ஸ்ரீபாஞ்சராத்ர சன்னிதிகள் இதில் எழுதப்பட்டபடியோ அல்லது கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கலாம். அவை யெல்லாம் கர்த்தாக்களின் இச்சை என்ற சாஸ்த்ரவிதியைப் பொருத்து அமையப் பெற்றிருக்கும். பாஞ்சராத்ர சன்னிதிகள்

நிர்மாணம் ஒரு ஆகமத்தில் சொல்லப்படாதது நிர்மாணமாகி இருந்தாலும் அது நிச்சயம் மற்றைய ஏதாவதொரு பஞ்சராத்ர மத்திலிருந்து சொல்லப்பட்டிருக்கும். அவை ஆராய்ச்சி செய்யப் படுமானால் நிச்சயம் புலப்படும்.

## 27. பிரதிஷ்டா ஆசார்யவரணம்

பூகர்ஷண காலத்தில் சகல குணங்களோடும் வரிக்கப்பட்ட அதே ஆசாரியனையே திரும்பவும் வரிக்க வேண்டும். அந்த ஆசாரியன் இல்லாமலிருந்தாலும் இருந்து அசக்தனாக இருந்தாலும் அதே குணங்களோடு கூடின அவனது புத்திரனை வரிக்க வேண்டும். அவன் மந்திர ஹீனனாக இருப்பானே யானால் சர்வ குணங்களும் நிறைந்து சக்கர மண்டல தீக்ஷை பெற்று ஸ்ரீபாஞ்சராத்திர தத்துவங்களை நன்றாக அறிந்து மந்திர தந்திராதிகள் நிறைந்துள்ள மற்றவனை ஆசாரியனாக எஜமான் வரிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட ஆசாரியனுடைய வீட்டிற்கு எஜமான் தானாகவே சென்று தெண்டம் சமர்ப்பித்து தேங்காய் களை ஆசாரியன் கையில் கொடுத்து ஸ்ரீவாசுதேவனுக்கு சந்நிதி பிரதிஷ்டை செய்து தந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். இப்படி வரிக்கப்பட்ட ஆசாரியன் ஜோதிஷத்தில் சிறந்த ஜோஸ்யனோடு பிரதிஷ்டா காலத்தை நிச்சயிக்க வேண்டும்.

## 28. பிரதிஷ்டா முகூர்த்தம்

புரட்டாசி, மார்கழி, மாசி இந்த மாதங்கள் கூடாது. மற்ற மாதங்களின் சுக்லபக்ஷத்தின் பிரதமை, திருதியை, த்விதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, தசமி, துவாதசி, த்ரயோதசி, பௌர்ணமி, இவைகளும் க்ருஷ்ண பக்ஷத்தின் பஞ்சமி வரையிலான திதி களும், வெள்ளி, திங்கள், புதன், வியாழன், ஞாயிறு இந்த கிழமைகளும், அசுவதி, ரோகிணி, பூசம், புனர்பூசம், உத்திரம், உத்திரட்டாதி, உத்திராடம், ஹஸ்தம், திருவோணம், ரேவதி இந்த நக்ஷத்திரங்களும், சிரேஷ்டமானவை. மலமாதம், சுக்ராஸ்தமனம், குருஅஸ்தமனம், வ்யதீபாதம் இவைகளில் கூடாது. சங்கராந்தி மற்றும் அசுபதினங்கள் கூடாது. சூர்ய சந்திர கிரகணங்கள் சம்பவித்தால், முன்னும் பின்னும் 16 தினங்கள் தள்ளிவிட

வேண்டும். அதிக மாதத்திலும் பருவங்கள் இரண்டு வரும் மாதத்திலும் பிரசித்தியில்லாத யோகங்களிலும் இவ்விதமான மற்ற அசுப காலங்களிலும் கூடாது.

## 29. லக்னங்கள்

வ்ருஷபம், மிதுனம், சிம்மம், மீனம், தனுசு, துலாம், இவைகளிலும், லக்னவான் பலவானாயும், குரு, சுக்கிரன், இவர்கள் லக்னத்தைப் பார்த்தாலும், அல்லது பதினொன்றிலிருந்தாலும், நல்லவைகள். எந்த லக்னம் எஜமானனுக்கும் சந்நிதிக்கும் சிரேயசை உண்டுபண்ணுமோ, அதில் முகூர்த்தத்தை நிச்சயித்துக் கொண்டு பிரதிஷ்டா காரியம் ஆரம்பம் செய்ய வேண்டும். அயனங்களில் உத்தராயணம் முக்கியமொன்றும், தக்ஷிணாயணம் முக்கியம் என்றும், சொல்லப்பட்டது. மூலபேரப் பிரதிஷ்டை உத்தராயணத்தில் தான் செய்ய வேண்டும். ஜங்கம பேராதி பிரதிஷ்டைகள் இரண்டு அயனங்களிலும் செய்யலாம்.

## 30. பிரதிஷ்டா அங்குரார்ப்பண விதி

பிரதிஷ்டா காரியத்திற்கு முன்னதாக அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும். அங்குரார்ப்பணம் செய்யாமல் நடத்தும் கர்மா பலனளிப்பதில்லையாகையால் முன்னமேயே அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும்.

**ப்ரதிஷ்டாகர்மண: பூர்வமங்குராரோபணம் பவேத் ।**
**நகர்மபலதம் ப்ரும்மத் அங்குராரோபணம் விநா**
**தஸ்மாதாரப்யமாணே ஷுப்ரதிஷ்டாதிஷுகர்மஸு**
**ப்ராகேவ, வாபயேத், தீமான் அங்குரார்ததம் யதாவிதி । "பாத்மே"**

பிரதிஷ்டைக்கு பன்னிரண்டு, ஒன்பது, ஐந்து மூன்று தினங்களுக்கு முன்னதாக பாலிகை, கடிகை, சராவங்களில் அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும்.

## 31. பாலாலயம் செய்யாமல் பெரிய சந்நிதி கட்டி பிரதிஷ்டை செய்ய நேரிட்டால் அதற்கு பிராயச்சித்தமாக செய்ய வேண்டிய விதி

பாலாலய பிரதிஷ்டை செய்யவில்லையானால் பிரதிஷ்டை

ஆரம்பிக்க முன்னால், நெல், அரிசி, எள்ளு இவைகளால் தான்யபீடம் செய்து அதில் பத்மம் எழுதி பால பிம்பத்தை யாவது, மகாகும்பம் ஒன்றையாவது வைத்து அதில் சூர்ய மண்டலத்திலிருந்தாவது க்ஷீராப்தியிலிருந்தாவது பெருமாளை இவ்விதம் பிரார்த்திக்க வேண்டும். "பாலாலயம் செய்யாமல் உள்ளவைகளுக்காக அடியேனை மன்னித்து, கிருபை செய்து, பெரிய சன்னிதியில் சான்னித்யம் செய்ய வேண்டி இந்தக் குடும்பத்தில் வந்தருள வேண்டும்" என்பது.

**"க்ஷந்து மர்கசி தேவே சா என்மயா பாலமந்திரம்**
**அக்ருத்வைவா க்ருதம் சத்ம பக்தானுக்ரக காம்யயா**
**அஸ்மின் நாகச்ச பகவான் சாதயாஸ்ம த்க்ரியாம்ஹரே"**

என்றபடி கும்ப ஆவாஹனம் செய்து, அர்க்யாதிகளால் அர்ச்சித்து, பாயசான்னம் நிவேதனம் செய்து நீராஞ்சனம் செய்ய வேண்டும்.

பூகர்ஷணம் முதல் பாலாலயம் வரை செய்து பின் பெரிய சந்நிதிகட்டி முடித்த பிறகு பாலபிம்பத்தின் முன்னால், குண்டம் அல்லது ஸ்தண்டிலத்தில் அக்னி உண்டு பண்ணி அந்தந்த காலங்களுக்கு உண்டான ஹோமங்களும், பிராயச்சித்த ஹோமமும், செய்து பூர்ணாகுதி செய்யவும் பின் சாயங்காலத்தில் மூலபிம்பம், ஆலயம் இவைகளின் மானோன்மான அளவுகளின் குறை அதிகம். இவைகளின் சாந்திக்காக, சாந்தி ஹோமம் செய்ய வேண்டும்.

## 32. சாந்தி ஹோமம்

பாலபிம்பத்திற்கு முன்னால் குண்டத்தில் 100 ஆகுதிகள் சப்த வியாகிருதியால் வன்னி இலை கலந்த அக்ஷதையாலும், 16 ஆகுதிகள் ந்ருசூக்தத்தால், அவிசாலும், பஞ்சோபனிஷன் மந்திரத்தால் 100 ஆகுதிகள் நெய்யாலும் ஆகுதி செய்து, பூர்ணாகுதி செய்து அக்னியில் விசர்ஜனம் செய்ய வேண்டும்.

## 33. ம்ருத்ஸங்கிரஹணம்

பின் சாயங்கால சமயம், பிரதிஷ்டா அங்குரார்ப்பணத்திற் காக, சொர்ணத்தாலான பாத்திரத்தில் வெற்றிலை, பாக்கு, பழம்,

தேங்காய், அக்ஷதை, சந்தனம், புஷ்பம், தர்ப்ப புஞ்சம், கரகம், குடை, சாமரம், விசிறி, தங்கத்தடி, கைவிளக்கு, இவைகள் முதலானவைகளோடும் பரிசாரகர்கள், மற்ற அர்ச்சகர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள், பிராம்மணோத்தமர்களோடும், வேதவாத்ய கோஷத்தோடும், பாலாலயம் சென்று பாலபிம்பத்தின் முன்னிலையில் சொர்ணபாத்திராதிகளை வைத்து ஸாஷ்டாங்க மாக தெண்டம் சமர்ப்பித்து, அர்க்யாதி நிவேதனம் வரை உபசரித்து ஆசார்யன் புஷ்ப அக்ஷதைகளை கையில் எடுத்துக் கொண்டு பெருமாளை பிரார்த்திக்க வேண்டும்.

சகல லோக க்ஷேமத்திற்காகவும், அரசு, அரசாட்சி, தேசம் செழிப்பதற்காகவும் மகா ப்ரதிஷ்டை சித்தியாவதற்கு அங்கு-ரார்ப்பணம் செய்யவேணும். அதற்கு மண் எடுப்பதற்காக சேனை முதல்வரையாவது, பக்ஷிராஜரையாவது ஆக்ஞாபிக்க வேண்டும் என்று பிரார்த்தித்து கையிலுள்ள அக்ஷதை, புஷ்பங் களை பால பிம்பத்தின் திருவடிகளில் சமர்ப்பித்து, ஸ்வர்ண பாத்திரத்தில் ‘6 தர்ப்பங்களால் செய்த கூர்ச்சத்தில் பால பிம்பத்தின் பீடத்திலிருந்து சேனை முல்வரையாவது, பெரிய திருவடியையாவது ஆவாஹித்து அர்க்யாதிகளால் உபசரித்து ப்ராத்திக்கவேணும்.

மகா ப்ரதிஷ்டா அங்குரார்ப்பணத்திற்கு மிருத் சங்கிரகணம் செய்ய என்னோடு கூடவரவேணும். இது பகவத் ஆக்ஞை என்று சொல்லி, வேத வாத்ய கோஷத்தோடு சேனை முதல்வர் ஆவாஹிக்கப்பட்ட கூர்ச்சத் தாம்பாளத்தை எடுத்துக் கொண்டு சிரசில் வைத்து, குடை, சாம தீபங்களோடு, கிழக்கு அல்லது வடக்கு திசையில் மண் எடுப்பதற்காகச் சென்று அங்கு நிர்மாணிக்கப்பட்ட மண்டபத்தை புண்யாப்ரோக்ஷணம் செய்து சேனை முதல்வரை அதில் ஏழப்பண்ண வேண்டும்.

### பூ, வராஹர்கள் ஆவாஹனம்

சேனை முதல்வருக்கு முன்னால் பூமியில் ஈசான்யத்தில் தலையும், நைருதியில் கால்களும், உயரே நோக்கிய திருமுக மண்டலமும், அஞ்சலித்தகையும், வஸ்த்ர பூஷணத்தால் அலங்கரித்தபடியாக பூப்பிராட்டியை எழுதி தாயாரின்

தலைப்பக்கமாவது, தென்பக்கமாவது தான்ய பீடம் செய்து, அதில் ஸ்வர்ண மண் வெட்டியை வஸ்த்ர தாபாதிகளால் அலங்கரித்து வைத்து, பூமியையும் மண்வெட்டியையும் சுற்றி பரிஸ்தரணம் செய்து போடவேணும்.

ஏழு தர்ப்பங்களாலான கூர்ச்சத்தை பூமியின் ஹிருதயத்தின் மேலும், மண் வெட்டியிலும் வைத்து புண்யாஹ ப்ரோக்ஷணம் செய்து, பூமந்திரத்தால் தேவியை ப்ரார்த்தித்து மஹா ப்ரதிஷ்டைக்கு திருமுளை சாத்த மண் எடுக்க வேணுமாகையால் இந்தத் தரணியில் சந்நிதி கொண்டருள வேணும் என்று பூமாதேவியை ப்ரார்த்தித்து ஆவாஹனம் செய்து அர்க்யாதிகளால் உபசரித்து, பின்ன மண்வெட்டியில் ஆதிவராஹனை ஆவாஹனம் செய்து அர்க்யாதிகளால் உபசரித்து, அப்பம் அமுது செய்வித்து, நீராஞ்சனம் செய்து, ஆசாரியன் மண் வெட்டியை எடுத்துக் கொண்டு ஸ்ரீவராக காயத்ரியை கோஷித்து கிழக்கு முகமாக பூமியின் முகம், கைகள், ஸ்தனம், கால்கள் இவைகளில் மண்ணை எடுத்து பாதாளத்திலிருந்து பூமியை ஸ்ரீவராகன் வெளியே ஏழப்பண்ணிக் கொண்டு வந்ததாக பாவித்து மண்ணை ஸ்வர்ண பாத்திரத்தில் விஷ்ணு காயத்ரியால் வைத்து, உலர்ந்த கோமய சூர்ணங்களையும் கொண்டு வந்து தாம்பாளத்தில் வைத்து, தேர், யானை, இவைகளிலாவது, பரிஜாரகன் தலையிலாவது தாம்பாளத்தை வைத்து வேத வாத்ய கோஷம் முழங்க சந்நிதி ப்ரதக்ஷிணமாக அங்குரார்ப்பண மண்டபம் போய் மண்டபத்தை புண்யாக ப்ரோக்ஷணம் செய்து அங்கே ம்ருத்தை ஏழப்பண்ண வேணும்.

## 34. பீஜா வாப பாத்ர லக்ஷண விதி

**பாலிகை :** பாலிகையின் உயரம் ஒரு முழம். இதன் முகத்தின் அளவு பதினாறு அங்குலம். இதன் துவாரம் ஏழு அங்குலம். பாத பீடத்தின் அளவு எட்டு அங்குலம். உயர்ந்து விரிந்த புஷ்பம் போல் வடிவம். முகம் தாமரைப் புஷ்பம் போல் இருக்க வேண்டும்.

**கடிகை :** கடிகையின் உயரம் 22 அங்குலம். இதற்கு 5 முகங்கள். இதன் உயரம் குடம்போல் இருக்க வேண்டும். ஆனால்

கீழே துவாரம் இருக்க வேணும். குடத்தின் நடுமுகம் 6 அங்குல அகலம். 4 திசைகளிலும் உள்ளமுகங்கள் ஒவ்வொன்றும் நாலு அங்குல அகல நீளம் இவைகள் வட்டமாய் இருக்கவேணும்.

**சராவரம் :** சராவர உயரம் 20 அங்குலம். அகலம் 12 அங்குலம். இந்த பாலிகை கடிகை சராவம் ஸ்வர்ணம், வெள்ளி, தாமிரம் அல்லது மிருத்தால் செய்ய வேண்டும்.

## 35. பாத்ரசங்க்யாவிதி

36 பாலிகை, 36 கடிகை, 36 சராவம். இவ்விதம் 108 பாத்திரம் உத்தம நியதி.

வகைக்கு 16 வீதம் 48 பாத்திரம், ஜகன்யக்லுப்தி வகைக்கு 12 வீதம் 36 பாத்திரமும், வகைக்கு 8 வீதம் 24 பாத்திரமும், வகைக்கு 4 வீதம் 12 பாத்திரமும், ஸ்தாபனம் செய்யலாம்.

அல்லது பாலிகை கடிகை சராவம் இவைகள் எல்லா வற்றின் அம்சமாகவும் 16, 8, 4 யதாசக்தி பாலிகையையே வைக்கலாம் என்பது விசேஷ விதி. இப்பாலிகை சங்க்யை தேவகாரியத்திற்கு இரட்டிப்பும் மனுஷ்ய காரியத்திற்கு ஒத்தையுமாக கொள்ள வேணும்.

கீழ் சொன்ன பாலிகாதி பாத்திரங்களை அதிவாசம் செய்து பாலிகாதிகள் வைக்கும் எண்ணிக்கையைப் பொருத்து சாஸ்த்ரோக்தமாக இடம் பண்ணி, தென்பக்கம் பாலிகையும், மத்தியில் கடிகையும் வடபக்கம் சராவமும் மேற்கிலிருந்து கிழக்காக வைக்க வேணும்.

அயுக்மா மாநுஷே கார்யே, தைவேயுக்மாஸ்து பாலிகா: ।। பாத்மே

36. சோம கும்ப, பாலிகா ஸ்தாபனம்

பாலிகையின் மேல் பக்கம் தான்ய பீடத்தில் சோம கும்பமும், உப கும்பங்களும், கரகமும வைத்து மூல மந்திரத்தால் இவைகளுக்கு வஸ்திர கூர்ச்சாதிகளால் அலங்கரிக்க வேணும். பின் பாலிகை வைப்பதற்கு தான்ய பீடம் செய்து பாலிகாதி பாத்திரங்களில் அரசிலை, தெர்ப்பம், மாங்குழை இவைகளைக் கழுத்தில் கட்டி தெர்ப்பங்களால் துவாரத்தை அடைத்து,

மண்ணால் நிரப்பி ருத்விக்கள் மற்றும் உள்ளவர்கள் ந்ருசூக்தம் கோஷிக்க, ஆசாரியன் பரஷ்டி மந்திரத்தால் தென்பக்கம் பாலிகையையும், விஸ்வ மந்திரத்தால் நடுவில் கடிகையையும், விஷ்ணு காயத்ரியால் வடபக்கம் சராவத்தையம் ஸ்தாபித்து, கந்தோதகத்தால் சோம கும்ப, உப கும்ப கரகங்களையும் பூரித்து, ரத்ன கூர்ச்சங்களை வைத்து தேங்காய், மாங்குழை இவைகளால் அலங்கரிக்க வேணும்.

## 37. பீஜாதிவாசம்

பிறகு செந்தினை, கருந்தினை, வெள்ளை நெல், செந்நெல், கோதுமை, சிறுபயறு, வெள்ளை மொச்சை, மூங்கிலரிசி, கேழ்வரகு, எள்ளு, உளுந்து, கொள்ளு, வெண்கடுகு, சாமை இந்த தான்யங்களின் வர்க்கங்களை வஸ்திரத்தால் சொர்ண பாத்திரத்தில் வைத்து நூதன வஸ்திரத்தால் மூடி பரிஜார கருடைய தலையில் வைத்து வேத வாத்ய கோஷத்தோடு சந்நிதிப் பிரதக்ஷிணம் வந்து திரும்ப அங்குரார்ப்பணமண்டபம் வந்து தான்யங்களை பாலில் நனைத்து விஷ்ணு காயத்ரி உச்சரித்து பிறகு தான்ய பீடத்தில் வைத்து புண்யாக ப்ரோக்ஷணம் செய்ய வேணும்.

## 38. பாலிகாதி, த்வாரதோரண, த்வஜ, கும்ப ஆவாஹனம்

பிறகு யாக சாலையின் கிழக்கு முதல் வடக்கு வரை நான்கு வாசல்களிலும் இரண்டு இரண்டு கும்பங்கள் ஸ்தாபித்து கிழக்கு முதல் அரசு, அத்தி, ஆல், கல்ஆல், இவைகளால் தோரணம் செய்து, கிழக்கு முதல் சிவப்பு, மஞ்சள், நீலம், வெள்ளை இவைகளால் இரண்டு இரண்டு கொடிகள் அலங்கரித்து பாலபிம்பத்தின் பீடத்திலிருந்து தேவதைகளை ஆவாஹித்து அர்ச்சிக்க வேணும்.

பாலிகை, கடிகை, சராவம் இவைகளிலும் சோமகும்பம், உபகும்ப கரகம் இவைகளிலும் ஆதார சக்தி முதல் பத்மம் வரை பீடபிரகல்பனம் செய்து, சங்கர்ஷண அம்சமான விஷ்ணுவை பாலிகைகளிலும், அனிருத்த அம்சமான ப்ருஹ்மாவை கடிகை களிலும், ப்ரத்யும்ன அம்சமான சங்கரனை சராவங்களிலும், ப்ரத்யும்ன அம்சத்திலிருந்து உண்டான ஒஷதிக்கு அதிபனான

சோமனை, சோம கும்பத்திலும், உப கும்பங்களில் இந்திராதிகளையும், கரகத்தில் சக்கரத்தாழ்வானையும், நீவாராதி தான்யங்களில் கேசவன் முதல் தாமோதரன் வரையானவர்களையும் ஆவாஹித்து அர்ச்சிக்க வேணும்.

இந்த மூன்றுக்கும் ஒரே அம்சமாக பாலிகையே வைக்கப் பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட பாலிகை பதினாறில் வாசுவோதி நால்வரையும், கேசவாதி பன்னிருவரையும், பன்னிரெண்டானால்; கேசவாதி பன்னிருவரையும், எட்டானால், விஷ்ணு முதல் தாமோதரர்களையும், நாலானால் ஜனார்த்தநாதி நால்வர்களையும் ஆவாஹித்து அர்ச்சிக்க வேணும். இவ்விதம் ஆவாஹித்து நவவஸ்திராதி அலங்கரித்து பாயசான்னம், நிவேதனம் செய்து, பின் அதிவாஸ ஹோமம் செய்ய வேணும்.

## 39. பீஜாவாய அதிவாஸ ஹோமம் அங்குரார்ப்பணம்

கடிகையின் முன்பக்கம் குண்டத்திலோ, ஸ்தண்டிலத்திலோ ஆதாராதி யோகபீடாப்ரகல்பனம் செய்து பகவானை ஆராதித்து, அவரிடமிருந்து அக்னி உத்பாதனம் செய்து, அக்னி முகாந்தம் வரை ஆகுதி செய்து, பின் அந்த அக்னியை சோடஸ ஸம்ஸ்காரம் செய்து வைஷ்ணவாக்னியாக்கி, பெருமாளை ஆவாஹித்து ,அர்க்கியாதி செபாந்தம் ஆகுதி செய்து உத்வாசித்து, பிறகு சோமனுக்கு பீடப்பிரகல்ப்பனம் செய்து ஆவாஹித்து, நெய்யால் அர்க்கியாதி செபாந்தம் ஆகுதி செய்து, பின் சோம மந்திரத்தால் ஆஜ்யாகுதியும், பின் மூல மந்திரத்தால் புரசு, கருங்காலி, அரசு, வில்வம் இவைகளால் 108 ஆகுதியும், புருஷ சூக்தத்தால் அவிசு 16 ஆகுதியும், பின் சோம மந்திரத்தால் சமித்துக்களால் 108 ஆகுதியும், பாலிகாதி அதிதேவதைகளின் மந்திரத்தால் 108, 28, 8 ஆஜ்யாகுதி செய்து பின் பூர்ணாகுதி செய்து சம்பாத ஆஜ்யத்தை தொட்டு கூர்ச்சத்தால் ஸ்பரிஸ மந்திரத்தால் பாலிகாதிகள் சோம கும்பம் இவைகளைத் தொட்டு, மிச்சத்தை பீஜா பாத்திரத்தில் சேர்த்து, அக்கினியிலிருந்து சேர்த்து உத்வாஸனம் செய்த, சோம மந்திரம் நூறு தரம் ஜெபித்து, சுபமுகூர்த்தத்தில் ப்ரும்மஸ்தானத்திலிருந்து ஈசானியம் வரை த்வாதசாக்ஷர மந்திரத்தால் பீஜாவாபம் செய்ய வேணும்.

பின் மூர்த்தான மந்திரத்தால், மண்ணால் மூல ஆபோகிஷ்ட மந்திரத்தாலும் இமம்மே வருண மந்திரத்தாலும், மஞ்சள் நீரால் பீஜங்களை தெளித்து சோம கும்ப தீர்த்தத்தால் பாலிகாதிகளை ப்ரோக்ஷித்து சோம கும்ப பாலிகாதி த்வார கும்ப தோரண த்வஜங்களை மறுபடி அர்க்கியாதிகளால் அர்ச்சித்து பாயசான்ன நிவேதனம் செய்து, ரக்ஷகர்களான குமுதாதிகளுக்கு பலிசாதிக்க வேணும். இவ்விதம் ப்ரதிஷ்டை முடியும்வரை பாலிகை சோம கும்ப பூஜை செய்யவேணும். அநிர்வாண தீபம் எரிய வேணும்.

40. யாகசாலையில் பாலிகா ஸ்தாபன விதி

நூற்றி எட்டுப் பாலிகைகள்வைக்க, விபவம் இல்லை யானால் மற்ற குறைந்த கணக்குள்ள பாலிகைகளை, யாக மண்டபத்திலேயே ஈசான திக்கில் வைத்துக் கொள்ளலாம். தனியாக அங்குரார்ப்பண மண்டபம் செய்ய வேண்டாம்.

**அஷ்டோத்தராந் பாலிகா தீந் நஸ்தாப யதிசேத்ரமே**
**பாலிகா ஏவ ஸர்வார்த்தே சோடச த்வாதசாஷ்டவா,**
**சத்வாரோ வாபி கல்ப்யாஸ்யுஸ்த தாப்ரத்யே கதோகுரு:**
**நகல்பயேத்ப்ர பாந்தாசாம் யாகமண்டப ஏவதா:**
**ஈசாந்யாம் வேதிகாயசம் சஸ்தாபயித்வாது பூஜயேத்:**

இந்த அங்குரார்ப்பணம் இரவு தான் செய்ய வேணும். ஒஷதிகளுக்கு அதிபனான சோமனுக்கு இரவு பிரியமானதால் இரவு செய்யப்பட்ட அங்குரார்ப்பணத்தால் சோமன் அதிப்ரீதி அடைந்து ஆசாரியனுக்கும், எஜமானனுக்கும், சந்நிதிக்கும், எம்பெருமானுக்கும் புகழைக் கொடுக்கிறான்.

## 41. அங்குர பேத பலன்

இவ்விதம் விதைக்கப்பட்ட அங்குரங்கள் பச்சை, கருப்பு, சிகப்பு இந்த வர்ணங்களில் உண்டானாலும் அல்லது குறுக்காக முளைத்தாலும், சாந்தி ஹோமம் செய்ய வேணும். உண்டா காமலே இருந்து விட்டால் சாந்தி செய்து மறுபடி பீஜா வாபம் செய்யவேணும். அங்குரம் பச்சை நிறமாக உண்டானால் த்ரவ்விய நாசமும், சிகப்பு கலகத்தையும், கருப்பு மனோ வியாதியையும், குறுக்காக முளைப்பது ரோகத்தையும்,

முளையாமலே இருந்துவிட்டால் மரணத்தையும் நிச்சயம் உண்டு பண்ணும். மஞ்சள் நிறமாகவும், வெள்ளையாகவும் நேராக உயரே நோக்கியும் உண்டாகும் அங்குரம் சகல சம்பத்தையும் செழிப்பையும் ஆசாரியனுக்கும், எஜமானனுக்கும் கொடுக்கும்.

### 42. க்ரியாதிகாரி

ஒரு காரியத்தை இட்டு முதலில் எவன்ஒருவன் அங்குரா ரோபம் செய்கிறானோ அவன்தான் அக்காரியத்தை முடிவு வரையிலும் செய்யவேணும். இதரர்கள் மகாபிராஞர்களாக இருந்தாலும் அக்காரியத்தை செய்யக்கூடாது. அந்த ஆசாரியன் அசக்தனானால் அவனுடைய கட்டளையினால் புத்திரனோ, சிஷ்யனோ, ருத்விக்களோ அக்கர்மாவைச் செய்யலாம் என்பது பாத்ம விதி.

### 43. யாக மண்டப, ப்ரதான வேதிகை நிர்மாணம்

ப்ராசாதத்தின் எதிரிலாவது, முதல் ப்ராகாரம், இரண்டாம் ப்ராகாரம், மூன்றாம் ப்ராகாரம் இவைகளிலாவது அல்லது யோக்கியமான இடத்திலாவது, எட்டுத் திக்குகளில் எது வசதியோ அந்த இடத்தில் யாக மண்டபம் செய்ய வேணும். இதன் நீள அகலம் 40 முழம் இருக்க வேணும். 24, 16, 12, 10, 8 அகல நீளம் இடத்தை பொருத்துக் கொள்ளலாம். இது சமசதுரமாக இருக்க வேணும். அல்லது மண்டபத்தின் தன்மையைப் பொருத்து கீழ்மேல் அல்லது தென்வடல் நீண்ட சதுரமாக இருக்கலாம் என்பது **அனிருத்த விதி**.

இந்த யாக மண்டபத்திற்கு நான்கு புறமும் சுற்றி ஒரு சாண் உயரமுள்ளதாக மேகலை அமைக்க வேணும். நான்கு திசைகளிலும் வாசல்கள் அமைக்க வேணும். யாக மண்டபத்தின் மத்தியில் ஒருமுழ உயரம், 5 முழ அகல நீளம் **பிரதான வேதிகை** அமைத்து, அந்த வேதிகைக்கு 3 அடி விட்டு 4 அல்லது 8 திக்கிலும் குண்டங்கள் அமைக்க வேணும்.

### 44. உபவேதிகைகள்

ஒரே சமயத்தில் விமானத்திற்கும், பெருமாளுக்கும் ஸம்ப்ரோக்ஷணம் நேருமானால் அப்பொழுது பிரதான வேதிகை,

இரண்டு அமைக்க வேணும்.

**ப்ரதிஷ்டா கர்ம தேவஸ்ய விமானஸ்யை கதாயதி**
**ததாவேதித்வயம் கார்யம் கடஸ்தாபன கர்மணி ।। ஸ்ரீப்ரச்னே**

இந்தப் ப்ரதான வேதிகைகளுக்கும், மற்ற வேதிகைகளுக்கும் கீழேயும், மேலேயும் ஒவ்வொரு மேகலை அமைக்க வேணும். **சயன வேதிகை** சயனாதி வாசத்திற்காகவும், நயனோன் முலத்திற்காகவும், பிரதான வேதிகையின் வடபக்கம் வேதிகையும், ஈசான்யத்தில் பாலபிம்பத்திற்கும், பாலிகைகளுக்கும் ஒரு வேதிகையும், சக்ராப்ஜ மண்டலத்திற்கு சயன வேதிகையின் பக்கத்தில் ஒரு வேதிகையும் அமைக்க வேணும்.

**பாத்ம சம்ஹிதையில்** சயனாதி வாசம் பிரதான வேதிகையிலேயேதான் செய்ய வேணும் என்று சொல்லப் பட்டது. சதுஷ் குண்டமானால் சக்ராப்ஜ மண்டலத்திற்கு **மாரு** திசையிலும் ஏக குண்டமானால் பிரதான வேதிகையின் வட பக்கமும் மண்டல வேதிகை அமைக்க வேணும். குண்டங்களுக்கும் வேதிகைகளுக்கும் மத்தியில் எவ்விதத் தூண்களும் இருக்கக் கூடாது.

## 45. குண்ட விதானம்

சதுரம், சாபம், விருத்தம், முக்கோணம், பத்மம், பஞ்ச கோணம், ஷட்கோணம், கமலம், யோனி சக்ரம் என்று பல வகைப்பட்டன குண்டங்கள். அக்குண்டங்கள் நிர்மாண தேசம் எண்ணிக்கைகளாவன :

**சதுஷ்குண்டம் :** ப்ரதான வேதிகைக்குக் கிழக்கு சதுரஸ்ரம். தெற்கு சாபம் (வில் வடிவு), மேற்கு வட்டம், வடக்கு முக்கோணம் அல்லது கமலம்.

**பஞ்சகுண்டம் :** சதுஷ்குண்ட விதானத்தின்படி நான்கும் 5வது குண்டம் இந்திர திசைக்கும், ஈசான்ய திசைக்கும் நடுவே பத்ம குண்டமோ அல்லது மறுபடி சதுர குண்டமோ அமைக்க வேணும் அல்லது கீழ்திசையிலோ, மேல்திசையிலோ அங்குள்ள குண்டத்தின் பக்கத்தில் கமலகுண்டம் செய்யலாம்.

**ஷட்குண்டம் :** சதுஷ்குண்டவிதி போல் நாலு குண்டமும்,

அக்னி திசையில் யோனி குண்டமும், ஈசான்யத்தில் ஷட்கோண குண்டமும் ஆக ஆறு குண்டங்களாகும்.

**சப்தகுண்டம் :** பஞ்சகுண்ட விதிப்படி ஐந்து குண்டமும், அக்னி திசையில் யோனி குண்டமும், ஈசான்யத்தில் திரிகோண குண்டமும் ஏழு குண்டங்களாகும்.

**அஷ்டகுண்ட விதி:** சதுஷ்குண்ட விதிப்படி நாலு குண்டங் களும் அக்னியில் யோனி குண்டமும், நைருதியில் ஷட் கோணமும், வாயுவில் பஞ்சகோணமும், ஈசான்யத்தில் அஷ்டகோணமும் எட்டுக்குண்டங்களாகும்.

**நவகுண்டம் :** அஷ்டகுண்டத்தின்படி எட்டும், சதுரஸ்ரத்தில் கிழக்கே, கமலகுண்டமும் ஆக ஒன்பது குண்டமாகும்.

**த்ரிஷட்குண்ட விதி:** சதுஷ்குண்ட விதிப்படி நான்கு திசை களிலும் உள்ள குண்டங்களின் இரு பக்கங்களிலும் பத்ம குண்டமும், த்ரிகோண குண்டமும் அமைக்கவேணும். ஆக ஒவ்வொரு திசைக்கும் மூன்று குண்டங்களாக பன்னிரெண்டு குண்டங்கள்.

46. குண்ட உபயோக க்ரமம்

பஞ்சமூர்த்தி ப்ரதிஷ்டையில், நவாக்னியும், சதுர்மூர்த்தி, ப்ரதிஷ்டையில் சப்தாக்னி அல்லது பஞ்சாக்னியும், ஏகமூர்த்தி ப்ரதிஷ்டையில் துவாதசாக்னி, அஷ்டாக்னி, ஷடக்னி, துர்யக்னி, அல்லது ஏகாக்னி, இவ்விதம் உபயோக க்ரமம்.

**ஏகமூர்த்தள வீதி ஹோத்ரா: யுக்மாஸ்யுரர்த்தவேதரே**

என்று ஏகாக்னி நிர்ணயம்.

## 47. பஞ்சமூர்த்தி நிரூபணம்

கர்ப்ப க்ரஹத்தில், திவ்ய பாகத்திலோ, ப்ரம்ம பதத்திலோ ஸ்ரீவாசுதேவனையும், கர்ப்ப க்ரஹத்திற்கு வெளியில் கீழ் திசையில் புருஷமூர்த்தியையும், தென்பக்கம் சத்யமூர்த்தியையும், மேல்பக்கம் அச்சுத மூர்த்தியையும், வடபக்கம் ஸ்ரீஅநந்த மூர்த்தியையும் சலமூர்த்தியாகவோ அசலமூர்த்தியாகவோ, பிரதிஷ்டை செய்வது பஞ்சமூர்த்தி பிரதிஷ்டையாகும்.

## 48. சதுர்மூர்த்திப் பிரதிஷ்டை

உள்ளே கர்ப்ப க்ரஹத்தில் ஸ்ரீவாசுதேவனையும், வெளியே தென்பக்கம் ஸ்ரீசங்கர்ஷணனையும், மேல்பக்கம் பிரத்யும்னனையும், வடபக்கம் அனிருத்தனையும் பிரதிஷ்டை செய்வது சதுர்மூர்த்திப் பிரதிஷ்டை ஆகும். இவர்கள் எந்த எந்த திசையை முக்கியமாக உடையவர்களோ, அதையே அபிமுகமாக வைத்து எழுந்தருள பண்ண வேண்டும். சங்க சக்ர கதா தரர்களாயும், முக்யமாக வலது திருக்கை அபயமாகவும் இருக்க வேணும்.

## 49. ஏகமூர்த்தி பிரதிஷ்டை

ஸ்ரீவாசுதேவனை ஏகபேரராகவோ பஹுபேரராகவோ கர்ப்ப க்ரஹத்தில் எழுந்தருள பண்ணும் பிரதிஷ்டை ஏகமூர்த்தி பிரதிஷ்டை. இவைகளைக் கொண்டு குண்டம் அமைக்க வேணும்.

## 50. குண்டயோனி விஷயம்

குண்டத்தின் மேல் பக்கம் மேகலையின் மேல் தலை பாகமும், கீழே தொங்கின பாவனையாக அடிப்பாகமும் இருக்க வேணும். இவ்விதம் குண்டத்தின் தென்பக்கமும் செய்யலாம். இதன் உருவம் பாம்பின் படம் போல் தலைப்புறமும், உடல் வால் போல் கீழ்பாகமும் அமையவேணும். அரசஇலை போலும், யானையின் உதடுபோலும் அமைக்கலாம். மோக்ஷத்தை உத்தேசித்து நடத்தும் ஹோம காரியங்களுக்கு இந்த யோனி கூடாது. ஸ்ரீப்ரஸ்ன ஸம்ஹிதை, ருத்துக்கள் ஹோமம் செய்யும் குண்டத்தில் யோனி செய்ய வேணும் என்கிறது.

**..த்ரஸ்த்தித்வ்ருஜோ ரோமோ குர்வந்தி கமலாலயே ।**
**..ந்தயோநிம் ப்ரகுர்வீத மேகலோபரி சர்ப்பவது ।।**

இத்தால் ஆசார்ய குண்டத்திற்கு யோனிவர்ஜிதமாயிற்று. ஸ்ரீவிஷ்வக்ஸேன ஸம்ஹிதையில் வைஷ்ணவாக்னி குண்டத்திற்கு யோனி லக்ஷணம் கூடாதென்றது.

**வைஷ்ணவாநலகுண்டஸ்ய வர்ஜயேத்யோநிலக்ஷணம் ।**

அனிருத்த ஸம்ஹிதையில் விசேஷமாக குண்டத்தின்

மேகலையின் மேல் சங்க சக்கரங்கள் செய்ய வேணுமென்றும், மேலும் சங்ககதா குண்டங்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

### 51. ஸ்நபன மண்டபம்

இந்த, யாக மண்டபத்தின் ஈசான்யத்தில் பதினாறு தூண்களாலான ஸ்நான மண்டபமும் செய்யவேணும். இதற்கு நான்கு வாசல்கள். இதில் ஸ்நான வேதிகை ஒருமுழ உயரம், இரண்டு அல்லது மூன்று முழ அகல நீளம் வேதிகை ஸ்ருஷ்டித்து வடதிக்கில் கீழ்நோக்கின ஜலதாரையும் செய்யவேணும்.

### 52. குண்டமேகலை

ஒவ்வொரு குண்டத்திற்கும் மூன்று அல்லது நான்கு அல்லது ஒன்று மேகலைகள் செய்ய வேண்டும். இவை, குண்டம் எவ்வித ரூபத்தில் இருக்கிறதோ அவ்விதமே இருக்க வேணும். குண்டத்தின் உயரம் 20 அங்குலம். இதில் ஒன்றாவது மேகலை 16 அங்குல உயரம்; இரண்டாவது 12 அங்குலம்; மூன்றாவது 8 அங்குலம்; நான்காவது 4 அங்குலம்; எல்லாவற்றிலும் அகலம் 4 அங்குலம். முதல் மேகலை சாத்விகி; இரண்டாவது ராஜசி; மூன்றாவது தாமசி; நான்காவது திரி குணஸ்வரூபம்; 4,3:1 மேகலை செய்யலாம்.

### 53. ஸ்ருக் லக்ஷணம்

ஹோமம் செய்வதற்காக ஸ்ருக்ஸ்ருவம் புரசு, கருங்காலி, அல்லது மற்ற எக்ஞ விருக்ஷங்களில் செய்யலாம். இதன் நீளம் தன் கையின் முழுநீளம் வேண்டும். இது தங்கம்; வெள்ளி; செப்பு. இந்த உலோகத்தில் செய்தால் சிரேஷ்டம் அல்லது மரத்தில் செய்யலாம், இதன் முகம் வராகவதனம் போல் இருக்க வேண்டும். குழி சதுரமாக இருக்க வேணும். அநத்ச் சதுரத் திற்குள் வட்டமாக இருக்க வேணணும். அதில் அரம் நாபி, நேமி, கர்ணிகையோடு அஷ்டதள பத்மம் உண்டாக்க வேண்டும். வட்டத்தின் வெளிச் சதுரத்தின் நான்கு முக்குகளிலும் சங்கம் பொறிக்க வேணும். வெளிப்பக்கம் நான்கு புறமும், மேகலைகள் செய்யவேணும். உள்பத்மத்திலிருந்து வெளியே வராகவதனம் போல் உள்ள மூக்கிற்கு துவாரம் செய்ய வேணும். இதன்

பின்பாகம் தாமரையின் பின்பாகம் போலாவது, ஆமையின் முதுகு போலாவது அமைய வேணும். இதன் பீடம் சதுரமாக இருக்கவேணும். இதன் காம்பு அடியில் கும்பம் மாதிரியாக செய்ய வேணும். அக்கும்பத்தின் மேல் தாமரை புஷ்பம் செய்ய வேணும். அத்தாமரையிலிருந்து இக்காம்பு தெண்டம் இணைந்து இருக்க வேணும். இது உருண்டையாகவோ, சதுரமாகவோ இருக்கலாம்.

**ஸ்ருவ லக்ஷணம் :** ஸ்ருவதெண்டம் ஒரு கை நீளமும், இதன் நெய்க்குழி வட்டமாகவும் இருக்க வேணும். அதில் முன்போலவே பத்மம் செய்ய வேணும். இதன்முகம் நாசிகைபோல் செய்து அதில் உள்குழியிலிருந்து இரண்டு துவாரங்கள் செய்ய வேணும். இந்த நாசிகா புடத்தின் பின்பக்கம் மத்தியில் ஒரு ரேகை செய்ய வேணும். இதன் கழுத்தில் ஒரு வளையமும், இதன் பின்பக்கம் நீண்ட பத்மமும் செய்ய வேணும். இதன் அடிக்காம்பு தெண்டம் பசுவின் வால்போல் செய்ய வேணும். இந்தக் காம்புகளில் சித்திர வேலைப்பாடுகள் செய்ய வேண்டும். ஸ்ருக்ஸ்ருவத்தின் பின் தாமரை போல் உள்ளவையின் இருபக்கங்களிலும் சங்கு சக்கரம் செதுக்க வேணும். இவ்விதம் உலோகத்திலோ மரத்திலோ செய்யலாம்.

**ஆகாதமரங்கள் :** புழு அரித்தது, இடையில் முறிந்தது, உயரே ஒரு பக்கம் காய்ந்தது, பொந்துள்ளது, தானாக விழுந்தது, இவைகள் ஸ்ருக்ஸ்ருவத்திற்குக் கூடாது. அதில் செய்தால் பெரிய தோஷம் ஸம்பவிக்கும்.

## 54. யாக மண்டப தோரணம்

யாக மண்டபத்தின் கிழக்கே அரசமரத்தாலும், தென் வாசலில் அத்தி மரத்தாலும், மேல்பக்கம் ஆலமரத்தாலும், வடபக்கம் கல் ஆலமரத்தாலும (இது இரளிமரம்) தோரணம் செய்ய வேணும். இந்த மரங்கள் கிடைக்காவிட்டால் ஏதாவது ஒன்றால் நான்கு வாசல்கக்கும் தோரணம் செய்யலாம். இந்த நான்கும் கிடைக்காவிட்டால் சந்தன மரத்தால் நான்கு வாசல்களுக்கும் தோரணம் செய்ய வேணும்.

## 55. தோரண லக்ஷணம்

இதன் உயரம் ஏழு அல்லது ஐந்து முழம் அல்லது ஒத்தைப்பட முழமாக இருக்க வேணும். இது கால்களின் உயர அளவு, பட்டிகை அரைமுழ அகலம் இருக்க வேணும். இதன் மத்தியில் சக்ரமும் இருபக்கமும் இரண்டு கருடர்களும் அமைக்க வேணும். கால்களின் கனம் 22 அங்குலம். அது வட்டமாகவோ, சதுரமாகவோ இருக்கலாம். இந்தக்கால்களில் ப்ரதக்ஷிணக் கிரமமாக பூர்ண கலசம்; சங்கம்; சக்ரம்; த்வஜம்; படகம்; கார்முகம்; நாகம் இவைகளை உண்டு பண்ண வேணும்.

## 56. த்வாரத்வஜம்

கீழவாசலில் சிவப்பு வர்ணமும், தெற்கு வாசலில் மஞ்சளும்; மேற்கே நீலமும்; வடக்கே வெள்ளையிலும் இரண்டு இரண்டு கொடிகள் செய்ய வேணும்.

## 57. அஷ்டமங்கலம்

இது உலோகத்திலோ, மரத்திலோ, செய்யலாம். 22 அங்குல நீளம், 11 அங்குல அகலம், 2 அங்குல கனம். பலகையை பீடத்தில் வைத்து இணைத்திருக்க வேண்டும். இவ்விதம் எட்டுப் பலகைகளில் (1) ச்ரீவத்ஸம், (2) பூர்ண கும்பம், (3) பேரி, (4) கண்ணாடி, (5) இரட்டை ...சம், (6) சங்கம், (7) சக்ரம், (8) கருடன் இவைகளை கீழே பத்மாசனமும், பக்கத்திலே தீபங்களும், சாமரங்களும், சிரசில் குடையுமாக எழுதி உண்டு பண்ண வேணும். மற்றும் நயனோன் மீலனத்திற்கும், ஜலாதி வாசங்களுக்கும் பீடங்களும், ஆசாரிய ருத்துக்களுக்கு கூர்மாசனங்களும், பாதுகைகளும் உண்டு பண்ண வேணும்.

## 58. மஹா கும்ப உபகும்ப லக்ஷணம்

உலோகத்தாலோ, மண்ணாலோ, இருக்க வேணும். இதன் உயரம் 24 அங்குலம். அகலம் குடத்தின் மத்தி 24 அங்குலம். கழுத்தின் உயரம் 3 அங்குலம். அதன் வாய் முகம் 6 அங்குலம். இவ்விதமும் அல்லது முன் சொன்ன அங்குலங்களின் பாதி அளவும் இருக்கலாம்.

### மற்றும் ஒரு அளவு

பதக்கு தீர்த்தம் கொள்ளும் அளவுள்ள குடம், உத்தமம். குறுணி தீர்த்தம் கொள்ளும் அளவுள்ளது, மத்திமம். அதற்குக் குறைவாகவும் இரண்டுபடி தீர்த்தம் கொள்ளும் அளவு உள்ளது அதமம். இவ்விதம் அமைக்க வேணும். உபகும்பமும் கரகமும் இந்த மஹாகும்பத்தின் பாதி அளவு இருக்க வேணும். கரகத்தின் வயிற்றில் ஒரு மூக்கு செய்ய வேண்டும்.